திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

BUDGET : 2024-2025
வரவு செலவுத் திட்டம்

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள்

மலைக்கோட்டை தெப்பக்குளத்தில் ஒலி ஒளி நிகழ்ச்சி

மத்திய பேருந்து நிலைய நவீன பொதுக் கழிப்பிட முகப்பு

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

2024-2025ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை
வரவு செலவு திட்ட மதிப்பீடு

தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகளில், சிறந்த மாநகராட்சியாக, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியினை தமிழ்நாடு அரசு தேர்ந்தெடுத்து, அதற்குரிய விருதினை 15.08.2023 அன்று சென்னையில் நடைபெற்ற இந்திய சுதந்திர தின விழாவில் வழங்கியது. மேலும், 2023ம் ஆண்டில் தமிழகத்திலேயே முதல் "தூய்மையான நகரம்" திருச்சிராப்பள்ளி என ஒன்றிய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குரிய விருதினை புதுதில்லியில் 11.01.2024 அன்று வழங்கியது.

இவ்விருதுகளை தக்க வைக்க, தேவையான அனைத்து பணிகளையும் மேற்கொள்ள, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டதற்கிணங்க, மாண்புமிகு நகராட்சி நிருவாகதுறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அனைத்து வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், திருச்சிராப்பள்ளி விமான நிலையம் சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்பட்ட பின்னர், மென்பொருள் தொடர்பான பணியாளர்கள் மற்றும் உலகெங்கிலும் இருந்து மாநகருக்கு வரும் சுற்றுலா பயணிகள், யாத்ரீகர்கள் மற்றும் வியாபார நோக்கில் வரும் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும், அவர்களுக்கு வழங்க வேண்டிய அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வேண்டியதை, கருத்தில் கொண்டு 2024-2025ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியின் மொத்த பரப்பளவு	167.23 சதுர கிலோமீட்டர்
2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி	9.16 இலட்சம்
2021ம் ஆண்டின் படி தோராய மக்கள் தொகை	10.81 இலட்சம்
வார்டு குழு அலுவலகங்கள்	5
வார்டுகள்	65

2024-2025ம் ஆண்டின் செயல்திறன் அறிக்கை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் 2023-2024ம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட போது இருந்த நிதி நிலை குறித்தும், தற்பொழுது 2023-2024ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடுகள் குறித்தும், மேற்கண்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் குறித்த விபரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

2023-2024ம் ஆண்டின் திட்ட மதிப்பீடு/திருத்திய மதிப்பீடு

(ரூபாய் கோடியில்)

வருவாய்/குடிநீர் மற்றும் மூலதன நிதி	2023-2024ம் ஆண்டு திட்ட மதிப்பீடு	2023-2024ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு
வரவு	1026.70	997.74
செலவு	1025.95	1087.62
உபரி	00.75	பற்றாக்குறை (-) 89.88

கல்வி நிதி

(ரூபாய் கோடியில்)

கல்வி நிதி	2023-2024ம் ஆண்டு திட்ட மதிப்பீடு	2023-2024ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு
வரவு	31.56	19.81
செலவு	23.45	18.80
உபரி	8.11	உபரி 1.01

இம்மாநகராட்சியில் 2023-24ம் ஆண்டில் மாநகராட்சி பொதுநிதி மற்றும் திட்டப் பணிகளின் கீழ் பெறப்பட்ட நிதிகளின் மூலம் கீழ்க்காணும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வ. எண்	பணிகளின் பெயர்	மொத்த மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)
	சிமெண்ட் சாலைகள்	
1	சிமெண்ட் கான்கிரீட் தளம் மேம்படுத்தப்பட்ட பணிகள்	2776.75
2	மண்சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் தளமாக மாற்றப்பட்ட பணிகள்	453.57
	தார்ச்சாலைகள்	
3	மண்சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றிய பணிகள்	5831.09
4	பேவர் இயந்திரம் மூலம் தார்தளம் மேம்படுத்தப்பட்ட பணிகள்	14030.67
5	பழுதடைந்த தார்ச்சாலைகளை பேட்ச் மூலம் சீரமைத்த பணிகள்	454.60
	இதர சாலைகள்	
6	பேவர் ப்ளாக்குகள் பதித்த பணிகள்	78.65
	மழைநீர் வடிகால்	
7	மழைநீர் வடிகால் புதிதாக கட்டிய பணிகள்	859.55
8	மழைநீர் வடிகாலில் மராமத்து மேற்கொள்ளப்பட்ட பணிகள்	675.06
9	வாய்க்கால் மற்றும் பிரதான மழைநீர் வடிகாலில் தூர் வாரிய பணிகள்	420.57
10	சிறுபாலங்கள் கட்டிய பணிகள்	253.65
	கட்டிடங்கள்	
11	அலுவலக கட்டிடம் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்ட பணிகள்	411.36
12	மாநகராட்சி குடியிருப்புகள் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்ட பணிகள்	50.40
13	பள்ளிக் கட்டிடங்களில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்ட பணிகள்	1824.94
14	புதிதாக நவீன கழிப்பிடங்கள் கட்டிய பணிகள்	174.17
15	நவீன கழிப்பிடங்கள் மராமத்து செய்யப்பட்ட பணிகள்	578.96
16	ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் மராமத்து மேற்கொள்ளப்பட்ட பணிகள்	6.97
17	தாங்கு சுவர் கட்டிய பணிகள்	711.94
18	எரிவாயு தகன மேடைகளில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்ட பணிகள்	403.12
19	ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்கள் மேம்படுத்துதல் மற்றும் சத்துணவு மையங்களில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டு பணிகள்	175.35
20	தேசிய நகர்புற சுகாதாரத் திட்டம் மற்றும் மகப்பேறு மையங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள்	625.93
21	மயானங்களில் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்ட பணிகள்	137.87
22	பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்பட்ட பணிகள்	54.55
23	சமுதாய கூடம் கட்டப்பட்ட பணிகள்	134.55
24	சந்தை/இறைச்சி கூடம்/ மீன் சந்தை அபிவிருத்திப் பணிகள்	112.35

25	பொது விநியோக மையக் கடைகள் கட்டிய பணிகள்	392.53
26	மீத்தேன் எரிவாயு பயன்பாட்டுடன் கூடிய சமையலைறையில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்ட பணிகள்(Bio Digester)	9.43
27	உயிரி அகழ்வு (Bio–mining) முறையில் குப்பைகளை அகற்றிய பணிகள்	610.62
28	வாசக சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள்	24.70
29	நாய் கருத்தடை மையம் கட்டிய பணிகள்	24.35
30	புதிதாக குறு பாலங்கள் கட்டிய பணிகள்	50.00
31	புதிதாக நடைபாதை பாலங்கள் கட்டிய பணிகள்	165.00
	பேருந்து நிலைய பணிகள்	
32	மத்திய பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள்	69.04
33	சத்திரம் பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள்	72.47
	பூங்காக்கள்	
34	பூங்காக்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள்	209.11
	தெருவிளக்குகள்	
35	தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் (பொது/தனியார் பங்களிப்பு பணிகள் உட்பட) பணிகள்	1248.60
36	சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் பேனல்கள் வழங்கும் பணி	189.80
	குடிநீர் மற்றும் வடிகால் பணிகள்	
37	தலைமை நீர்ப்பணி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள்	319.59
38	குடிநீர் உலர்த்தி அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்	8.80
39	ஸ்கேடா அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்	486.49
40	குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிய பணிகள்	325.73
41	குடிநீர் விநியோகம் மற்றும் குழாய்கள் பதிக்கப்பட்ட பணிகள்	738.60
42	மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள்	16.00
43	குடிநீர் வழங்குதலில் மேற்கொள்ளப்பட்ட இதர பணிகள்	1196.17
44	ஆழ் துளைக் கிணறுகள் அமைக்கப்பட்ட பணிகள்	4.43
45	பாதாளச் சாக்கடை கழிவு நீர் உந்து நிலைய பராமரிப்பு, பாதாளச் சாக்கடை கழிவு நீர் சேகரக் குழாய் பதித்தல் மற்றும் பராமரிப்பு பணிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்	708.49
46	கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்பு பணிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்	378.90
	திடக்கழிவு மேலாண்மை பணிகள்	
47	குப்பைக் கிடங்கு / உரக்கிடங்குகளில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள்	32.91
48	திடக்கழிவு மேலாண்மை அபிவிருத்திப் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் /வாகனங்கள் வாங்கிய பணிகள்	5218.77

49	நுண் உர செயலாக்க மையங்களில் அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்ட பணிகள்	134.78
50	கனிணி இயக்குபவர்கள் ஊதியம் வழங்கியது	17.64
51	ஒப்பந்த முறையில் ஓட்டுநர்களை ஈடுபடுத்தும் பணிக்கு வழங்கியது	355.99
52	வெளிக் கொணர்வு முறையில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு வழங்கியது	7200.00
53	வாகன பராமரிப்பு பணிகளுக்கு வழங்கியது	144.47
	இதரப் பணிகள்	
54	மின்னணு ஆளுமைக்கு மேற்கொள்ளப்பட்ட பணிகள்	62.12
55	நீர் நிலைகள் மேம்படுத்துலுக்கு மேற்கொள்ளப்பட்ட பணிகள்	141.69
56	தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள்	9.98
57	குளங்கள் மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட பணிகள்	342.38
58	சாலை மைய தடுப்புச் சுவர்கள் கட்டு வதற்கு மேற்கொள்ளப்பட்ட பணிகள்	290.47
59	மேற்கொள்ளப்பட்ட இதரப் பணிகள்	1771.89
60	விளம்பரப் பலகைகள் அமைக்க மேற்கொள்ளப்பட்ட பணிகள்	59.69
61	பொது சுகாதாரப் பணிகளுக்கு பைரத்ரம் திரவம் கொள்முதல் செய்ய மேற்கொள்ளப்பட்ட பணிகள்	321.05
62	பொது சுகாதாரப் பணிகளுக்கு தேவையான பொருட்கள் வாங்க மேற்கொள்ளப்பட்ட பணிகள்	235.11
63	உடற்பயிற்சி மையம் அமைக்க மேற்கொள்ளப்பட்ட பணிகள்	50.00
64	மரம் நடுதல் / அடர்வனக் காடுகள் அமைக்க மேற்கொள்ளப்பட்ட பணிகள்	21.70
65	கொண்டாட்டங்கள் மற்றும் திருவிழாக்கள் மேற்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட பணிகள்	66.55
66	முதலமைச்சர் காலை சிற்றுண்டித் திட்டத்திற்கு வழங்கியது	255.00
67	வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள்	209.65
68	பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் மற்றும் கனரக சரக்கு வாகன முனையம் கட்டும் பணிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்	28820.00
69	சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள்	1343.05
70	அம்ரூத் – பாதாளச் சாக்கடை வசதிகள் வழங்கும் பணி – பகுதி 2	2427.35
71	அம்ரூத் – பாதாளச் சாக்கடை வசதிகள் வழங்கும் பணி – பகுதி 3	4352.14
72	பரப்புரையாளர்களுக்கு ஊதியம் வழங்கியது	**72.00**
73	அம்மா உணவகங்களுக்கு ஆகிய செலவினம்	**333.09**
	மொத்தம்	**92784.94**

மேற்கண்ட பணிகளுக்கான நிதி ஆதாரம், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளின் மான்யம், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி நிதி, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி, மாநகராட்சியால் பெறப்பட்ட கடன் மற்றும் மாநகராட்சி பொதுநிதி ஆகியவைகளிலிருந்து பெறப்பட்டு மாநகராட்சி வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது.

மேலும், கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு வார்டிற்கும் மழைநீர் வடிகால்கள் மேம்படுத்தும் பணிகளுக்கென தலா ரூ.50.00 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.32.50 கோடி ஒதுக்கீடு செய்து, தற்பொழுது அனைத்துப் பணிகளும் நடைபெற்று வருகிறது.

2023-24ம் ஆண்டில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை ரூ.89.88 கோடியினை, மாநகராட்சிக்கு நிலுவையிலுள்ள அனைத்து வரியினங்களையும் நிலுவையின்றி வசூல் செய்ய, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2023-2024ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்

1. மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் (பழைய வார்டு எண்.61 முதல் 65 வரை) குடிநீர் அபிவிருத்தித் திட்டம் K f W ஜெர்மானிய வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்துதல்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் புதிதாக சேர்க்கப்பட்ட திருவெறும்பூர் பேரூராட்சி, பாப்பாகுறிச்சி ஊராட்சி, எல்லக்குடி ஊராட்சி, கீழகல்கண்டார் கோட்டை ஊராட்சி மற்றும் ஆலத்தூர் ஊராட்சி, ஆகிய பகுதிகள் அடங்கிய 5 பழைய வார்டு (61, 62, 63, 64 மற்றும் 65) பகுதிவாழ் பொதுமக்களுக்கு CPHEEOன் நெறிமுறைகளின்படி நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் குடிநீர் வழங்குவதற்கு, ஜெர்மானிய வங்கி நிதி உதவியின் கீழ் (KfW) ரூ.63.70 கோடி மதிப்பீட்டில் பணிகள் 3 தொகுப்புகளாக எடுத்து கொள்ளப்பட்டு, தொகுப்பு எண்.2 மற்றும் 3ல் அடங்கும் பணிகள் முடிக்க பெற்று சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

தொகுப்பு எண்.2ல் 21.556 கி.மீ பிரதான குடிநீர் உந்துக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. தொகுப்பு எண்.3ல் புதிதாக 38.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட 8 எண்ணிக்கைகள் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளும், பழைய 3 எண்ணிக்கைகள் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளிலிருந்து குடிநீர் வழங்கும் வகையில் 211.711 கி.மீ குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு எண்.1ல் அடங்கும் நீர்சேகரிப்பு கிணறு மற்றும் நடைபாதை மேம்பாலம் அமைக்கும் பணிகள், மெசர்ஸ். செந்தில் பைல் பவுண்டேஷன், திருச்சி என்ற நிறுவனம் மூலம் 90 சதவீத பணிகள் முடிவுற்றுள்ள நிலையில், 31.03.2024 உடன் பணிகள் முழுமையாக முடிக்கப் பெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 19343 வீட்டு குடியிருப்பு இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டு, 88054 மக்கள் பயன் பெற உள்ளனர். இதுநாள் வரை இத்திட்டத்திற்கு ரூ.61.00 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2. பாதாள சாக்கடை திட்டம் – அம்ரூத் பகுதி II (Phase – II)

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கான பாதாள சாக்கடை வசதி வழங்கும் திட்டத்தினை அம்ரூத் பகுதி II (Phase –II) திட்டத்தின் கீழ் செயல்படுத்தவும், 2020

ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, ரூ.344.00 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசு ஆணை எண்.111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC.2) நாள்.25.10.2017ல் நிர்வாக அனுமதி அளித்ததின் பேரில், மேற்படி திட்டப்பணிக்கு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டது. மேலும், உள்ளாட்சிகளின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு, அரசு ஆணை (ப) எண்.43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC.2). நாள்.28.02.2019–ல் திட்ட மதிப்பீடு ரூ.377.29 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நிதி ஆதாரம் பின்வருமாறு

(ரூபாய் கோடியில்)

திட்டத்தின் பெயர் /திட்ட எண்	மதிப்பீட்டுத் தொகை	திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம்				
		ஒன்றிய அரசு மான்யம்	தமிழக அரசு மான்யம்	உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு		
				மாநகராட்சி நிதி	ஆசிய வங்கி நிதி	
					மான்யம்	கடன்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் வழங்குதல் (பகுதி II)	377.29	172.00	68.80	43.11	55.54	37.84

இத்திட்டத்தில் 24 வார்டுகளுக்கு பாதாள சாக்கடை அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மூன்று தொகுப்புகளாக மேற்கொள்ளப்பட்டு வரும், இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :–

வ எ ண்	முக்கிய கூறுகள்	ஒப்பந்த அடிப்படையில்	AS per site Condition	31.01.2024 வரை பணி முன்னேற்ற அறிக்கை
1	கழிவுநீர் சேகரக்குழாயின் நீளம்	312.21 கி.மீ	284.464 கி.மீ	284,464 கி.மீ/ 282.935 கிமீ பதிக்கப்பட்டுள்ளது
2	பிரதான கழிவுநீர் உந்துக் குழாய் நீளம்	24 கி.மீ	27.262 கி.மீ	27.262 கி.மீ / 26.178 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது
3	நுழைவு தொட்டிகளின் எண்ணிக்கை	12109 எண்கள்	11250 எண்கள்	11250/11168 எண்ணிக்கை முடிக்கப்பட்டுள்ளது
4	கழிவுநீர் உந்து நிலையம்	5 எண்கள்	6 எண்கள்	5 எண்ணிக்கை கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1 பணி நடைபெறுகிறது.
5	கழிவு நீரேற்று நிலையம்	24 எண்கள்	28 எண்கள்	12 எண்ணிக்கை மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது/ 15 கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 1 பணி நடைபெறுகிறது.
6	வழங்கப்படும் வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை	44569 எண்கள்	40969 எண்கள்	40969 / 34984 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது
7	கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கீழகல்கண்டார் கோட்டை (37 MLD)	1	1	பணி முடிவுற்றது

2 தொகுப்புகளுக்கான (பகுதி II திட்டம்) பணிகளும் 31.03.2024 அன்று முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணிகளுக்காக இதுவரை ரூ.299.73 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

3. பாதாள சாக்கடைத் திட்டம் – அம்ரூத் பகுதி III (Phase – III)

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மேலும் விடுபட்ட வார்டுகளில் பாதாள சாக்கடை அமைப்பதற்கு 2017–2020ம் வருடத்தின் அம்ரூத் (AMRUT) திட்டத்தின் கீழ், 2020ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, ரூ.312.14 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசு ஆணை எண்.5 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (M A . 2) நாள்22.01.2018–ல் நிர்வாக அனுமதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், உள்ளாட்சிகளின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு, அரசு ஆணை (ப) எண்.43, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA.2) நாள்.26.03.2020ல் திட்ட மதிப்பீடு ரூ.330.31 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நிதி ஆதாரம் பின்வருமாறு

(ரூபாய் கோடியில்)

திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம்				
		ஒன்றிய அரசு மான்யம்	தமிழக அரசு மான்யம்	உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு		
				மாநகராட்சி நிதி	ஆசிய வங்கி நிதி	
					மான்யம்	கடன்
திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் (பகுதி 3)	330.31	132.06	52.82	40.78	54.69	49.96

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் முக்கிய அம்சங்கள் :–

வ எ ண்	முக்கிய கூறுகள்	ஒப்பந்த அடிப்படையில்	AS per site Condition	31.01.2024 வரை பணி முன்னேற்ற அறிக்கை
1	கழிவுநீர் சேகரக்குழாயின் நீளம்	326.765 கி.மீ	292.900 கி.மீ	292.900 கி.மீ/ 266.910 கிமீ பதிக்கப்பட்டுள்ளது
2	பிரதான கழிவுநீர் உந்துக் குழாய் நீளம்	20.925 கி.மீ	28.207 கி.மீ	28.207 கி.மீ / 16.240 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது
3	நுழைவு தொட்டிகளின் எண்ணிக்கை	12389 எண்கள்	11890 எண்கள்	11890/10853 எண்ணிக்கை முடிக்கப்பட்டுள்ளது
4	கழிவுநீர் உந்து நிலையம்	7 எண்கள்	6 எண்கள்	5 எண்ணிக்கை கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 1 பணி நடைபெறுகிறது.

5	கழிவு நீரேற்று நிலையம்	11 எண்கள்	24 எண்கள்	16 கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 5 பணிகள் நடைபெற்று வருகிறது. 3 பணிகள் நடைபெற உள்ளது.
6	வழங்கப்படும் வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை	32000 எண்கள்	32000 எண்கள்	32000 / 30556 வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது

இப்பணிகளுக்காக இதுவரை ரூ.270.75 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

4. குடிநீர் மேம்பாட்டுப் பணிகள்–மாநில நிதிக்குழு பகிர்வு நிதி 2021–22

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.11222/1/W S 2 நாள்.01.07.2021–ல் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)
1	வார்டு எண். 56க்குட்பட்ட தமிழக அரசு ஊழியர்கள் கூட்டுறவு குடியிருப்பில் (எஸ்.எஸ்.நகர்) 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணி	95.00
2	வார்டு எண். 56க்குட்பட்ட விஸ்வாஸ் நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முதல் தமிழக அரசு ஊழியர்கள் கூட்டுறவு குடியிருப்பில் (எஸ்.எஸ்.நகர் வரை) குடிநீர் உந்துக் குழாய்கள் பதிக்கும் பணி	70.25
3	வார்டு எண். 56க்குட்பட்ட திண்டுக்கல் பிரதானச் சாலையில் பிராட்டியூர் முதல் மின்வாரிய உபநிலையம் வரை குடிநீர் உந்துக் குழாய்கள் பதிக்கும் பணி	95.00
4	வார்டு எண். 55க்குட்பட்ட திண்டுக்கல் பிரதானச் சாலையில் , ஜங்ஷன் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முதல் கருமண்டபம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை குடிநீர் உந்துக் குழாய்கள் பதிக்கும் பணி	94.90
5	வார்டு எண். 56க்குட்பட்ட திண்டுக்கல் பிரதானச் சாலையில் , கருமண்டபம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முதல் தீரன் நகர் பேருந்து நிறுத்தம் வரை குடிநீர் உந்துக் குழாய்கள் பதிக்கும் பணி	94.85
	மொத்தம்	450.00

மேற்கண்ட அட்டவணையில் வ.எண்.1 முதல் 5 வரை கண்டுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இதுநாள் வரை ரூ.123.93 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் வரும் மார்ச் 2024ல் முடிக்கப் பெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

6. மாநில நிதிக்குழு மான்யம் (SFC–URDF)- 2022-23

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.34226/2022/S S 2 நாள்.21.04.2023ல் ரூ.15.41 கோடி மதிப்பீட்டில் (முழு மான்யம் ரூ. 15.41 கோடி) சாலை பணிகள் 10 தொகுப்புகளில் 167 பணிகள் மேற்கொள்ள நிர்வாக

அனுமதி பெறப்பட்டு, தற்போது, 158 பணிகள் ரூ.11.57 கோடி செலவில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

7. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி TURIP- 2022-23 (Savings, Phase-I, II & III)

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.24826/2022/எஸ்எஸ்2 நாள்.07.09.2022ல் ரூ.29.74 கோடி மதிப்பீட்டில் (முழு மான்யம் ரூ.29.74 கோடி) சாலை பணிகள் 18 தொகுப்புகளில் 122 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, அனைத்துப் பணிகளும் ரூ.26.43 கோடி செலவில் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.24826/2022/எஸ்எஸ்1 நாள்.07.09.2022ல் ரூ.9.93 கோடி மதிப்பீட்டில் (முழு மான்யம் ரூ.9.93 கோடி) சாலை பணிகள் 7 தொகுப்புகளில் 116 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தற்போது, 115 பணிகள் ரூ.7.87 கோடி செலவில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள ஒரு பணி நடைபெற்று வருகிறது

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.24826/2022/எஸ்எஸ்1 நாள்.07.09.2022ல் ரூ.14.35 கோடி மதிப்பீட்டில் (முழு மான்யம் ரூ.14.35 கோடி) சாலை பணிகள் 11 தொகுப்புகளில் 93 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தற்போது, 89 பணிகள் ரூ.12.92 கோடி செலவில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.28771/2022/எஸ்எஸ்1 நாள்.07.03.2023ல் ரூ.9.48 கோடி மதிப்பீட்டில் (முழு மான்யம் ரூ.9.48 கோடி) சாலை பணிகள் 8 தொகுப்புகளில் 65 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, அனைத்துப் பணிகளும் ரூ.8.35 கோடி செலவில் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

8. நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் NSMT- 2022-23

தமிழ்நாடு அரசாணை GO.(D).192 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.03.2023ல் ரூ.24.91 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகள் 19 தொகுப்புகளில் 424 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தற்போது, 406 பணிகள் ரூ.20.69 கோடி செலவில் முடிக்கப்பட்டு. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

9. மூலதன நிதி (Capital Grant Fund 2022 –23)

இத்திட்டத்தின் கீழ், ரூ.2.10 கோடி மதிப்பீட்டில், குழுமிக்கரை பகுதியில் நவீன எரிவாயு தகன மேடை கட்டும் பணிக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தற்பொழுது பணி நடைபெற்று வருகிறது.

மேலும், ரூ.24.30 கோடி மதிப்பீட்டில் கொல்லாங்குளத்தை (கருமண்டபம் பகுதி மற்றும் எடமலைப்பட்டிபுதூர் பகுதி) மேம்படுத்தி, அழகுப்படுத்தும் பணிகளுக்கு, நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீரங்கம் பகுதி வாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஸ்ரீரங்கத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் பணியினை ரூ.11.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு அரசாணை

(நிலை) எண்.562 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா.5) துறை நாள்.26.09.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிக்கான நிதியாதாரம் கீழ்க்கண்டவாறு.

(ரூபாய் கோடியில்)

மூலதன மான்ய நிதி 2022-2023	மாநகராட்சி பங்களிப்பு	மொத்தம்
7.77	3.33	11.10

10. அம்ரூத் 2.0

அ. குடிநீர் விநியோகம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் காவேரி மற்றும் கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாக கொண்டு, தினசரி சுமார் 142 MLD குடிநீர், 8 தலைமை நீர்ப்பணி நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 3 நீர்ப்பணி நிலையங்கள் மூலமாக, பல்வேறு பகுதிகளில் உள்ள 136 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் வாயிலாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் 2023-24 ஆண்டு சட்டமன்ற அறிவிப்பில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் முறையாக தொடர்ந்து 24 மணி நேரமும் கிடைக்கும் என்ற நிலையினை அடைந்திட, பரீட்சார்த்த முறையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உட்பட 9 மாநகராட்சிகளிலும், 3 நகராட்சிகளிலும் சுமார் 5000 முதல் 10000 வரையிலான குடிநீர் இணைப்புகள் மூலம் 24 x 7 குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கு ரூ. 420 கோடி ஒதுக்கீடு செய்து சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது (ஒரு மாநகராட்சி/நகராட்சிக்கு ரூ.35.00 கோடி வீதம்).

இதனைத் தொடர்ந்து, அரசாணை எண்.148, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.22.11.2023ல் கீழ்க்கண்ட நிதி பகிர்மானத்தின்படி இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம்		
		ஒன்றிய அரசு மான்யம்	தமிழக அரசு மான்யம்	உள்ளாட்சி / பிற நிறுவன நிதி ஆதார பகிர்வு
திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பரீட்சார்த்த முறையில், 24 x 7 குடிநீர் திட்டம் செயல்படுத்தும் பணி	34.62	11.54	10.39	12.69

- இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்
  - குடிநீர் விநியோகக் குழாய்கள் பதித்தல் – 100.697 கி.மீ
  - குடிநீர் உந்துக் குழாய்கள் பதித்தல் – 1.10 கி.மீ
  - புதிதாக மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுதல் (2.00 LL) – 1 எண்கள்
  - குடிநீர் வீட்டிணைப்புகள் –14819 எண்கள்
  - SCADA அமைப்புகள் ஏற்படுத்துதல்
- இப்பணிக்கு வரும் 23.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

ஆ. 100 MLD கொள்ளளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (SBR Technology) கட்டும் பணி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் 4, வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூரில் புதிதாக 100 MLD கொள்ளளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு அரசாணை எண்.54 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.05.2023ல் ரூ.216.20 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

(ரூபாய் கோடியில்)

திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம்		
		ஒன்றிய அரசு மான்யம்	தமிழக அரசு மான்யம்	உள்ளாட்சி / பிற நிறுவன நிதி ஆதார பகிர்வு
புதிதாக 100 MLD கொள்ளளவு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி	216.20	71.35	64.86	79.99

இந்நிலையில், AMRUT 2.0 (2023–24) திட்ட நெறிமுறைகளின்படி செயல்படுத்திடவும், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைகள், (TNUIFSL), சென்னை நிறுவன தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், அவர்களின் கடிதம் எண்.TNUDF/Projects/SMIF–TN–III/Trichy/STP நாள்.25.08.2023ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளின்படி, கீழ்க்கண்ட நிதி ஆதாரங்களின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு, மாமன்ற தீர்மானம் எண். 636, நாள்.03.10.2023ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(ரூபாய் கோடியில்)

திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம்			
		ஒன்றிய அரசு மான்யம்	தமிழக அரசு மான்யம்	ஜெர்மானிய வங்கி நிதி (Kfw)	
				மான்யம்	கடன்
புதிதாக 100 MLD கொள்ளளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி	233.87	71.35	64.86	48.83	48.83

மேற்படி திட்ட பணிக்கு, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.197/2023-24 நாள்.24.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்பு கடிதம் 12.02.2024 அன்று வழங்கப்பட்டுள்ளது.

இ. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் (Phase IV)

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பாதாள சாக்கடை வசதி விடுபட்ட பகுதிகளுக்கு சுமார் 140.00 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கு (Phase IV) அம்ரூத் 2.0 (2023-24) திட்டத்தின் கீழ், அரசாணை எண். 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 02.09.2023ல் ரூ.221.39 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

(ரூபாய் கோடியில்)

திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம்		
		ஒன்றிய அரசு மான்யம்	தமிழக அரசு மான்யம்	உள்ளாட்சி / பிற நிறுவன நிதி ஆதார பகிர்வு
விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் பணி (Phase IV)	221.39	73.06	66.42	81.91

AMRUT 2.0 திட்ட நெறிமுறைகளின் படி செயல்படுத்திடவும், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி, சென்னை அவர்களின் கடிதம் எண். TNUDF/Projects/SMIF-TN-III/Trichy UGSS – Phase IV, நாள். 30.11.2023ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் படி, ரூ.230.61 கோடிக்கு கீழ்க்கண்ட நிதி ஆதாரங்களின்படி மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ரூபாய் கோடியில்)

திட்டத்தின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	திட்ட நிதி ஒதுக்கீடு ஆதார விபரம்			
		ஒன்றிய அரசு மான்யம்	தமிழக அரசு மான்யம்	ஜெர்மானிய வங்கி நிதி (Kfw)	
				மான்யம்	கடன்
விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் பணி (Phase IV)	230.61	73.06	66.42	45.56	45.57

மேற்கண்ட நிதி ஆதாரங்களின்படி, பணியினை மேற்கொள்ள 27.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் அடங்கும் பணிகள் விவரம் பின்வருமாறு.

- கழிவுநீர் சேகரக் குழாய் பதித்தல் – 143. 662 கி.மீ
- பாதாள சாக்கடை வீட்டிணைப்புகள் – 16500
- கழிவுநீர் உந்து நிலையம் – 09 எண்ணிக்கை
- கழிவுநீர் சாலையோர உந்து நிலையம் – 14 எண்ணிக்கை
- நுழைவுத் தொட்டிகள் – 5872 எண்ணிக்கை
- கழிவுநீர் பிரதான உந்துக் குழாய் பதித்தல் – 35.61 கி.மீ

ஈ. குளங்கள் புனரமைத்தல்

- இத்திட்டத்தின் கீழ் (அம்ரூத் 2022–23), வார்டு எண்.38க்குட்பட்ட, காட்டுர், பாப்பாக்குறிச்சி பகுதியில் உள்ள தாமரைக்குளத்தினை ரூ.94.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, 95 சதவீத பணிகள் முடிக்கபெற்று மீதமுள்ள பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது.
- வார்டு எண்.42க்குட்பட்ட மஞ்சத்திடல் குளத்தினை சீரமைக்கும் பணிகள் ரூ.57.00 இலட்சம் மதிப்பீட்டில் அம்ரூத் 2023–24ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

11. அ. மூலதன மான்ய நிதி (Capital Grant Fund 2023 –24)

அ) மூலதன மான்ய நிதி (Phase–IV) கீழ், ரூ.4.77 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, கீழ்க்கண்ட பகுதிகளில் 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டுவதற்கு 23.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி ஏற்பளிப்பு கடிதம் 07.02.2024 அன்று வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்.	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூ. கோடியில்)
1.	வார்டு எண்.25க்குட்பட்ட சண்முகா நகர் பகுதியில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி புனரமைக்கும் (reconstruction) பணி	1.39
2.	வார்டு எண்.25க்குட்பட்ட MM நகர் பகுதியில் புதிதாக 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணி	1.67
3.	வார்டு எண்.26க்குட்பட்ட கல்லாங்காடு பகுதியில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி புனரமைக்கும் (reconstruction) பணி	1.71
	மொத்தம்	4.77

அ) மூலதன மான்ய நிதி (Phase–VI)ன் கீழ், ரூ.2.03 கோடிக்கு கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 14.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

வ. எண்.	பணியின் பெயர்	நிதியாதாரம் (ரூ. கோடியில்)		
		மான்யம்	மாநகராட்சி பங்களிப்பு	மொத்தம்
1.	வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூர் பகுதியில் 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டும் பணி	1.00	1.03	2.03
	மொத்தம்			2.03

ஆ.வார்டு எண். 40க்குட்பட்ட நியூடவுன் முத்துநகரில் 5 மீட்டர் அகலமுள்ள உயர்மட்ட பாலம் கட்டும் பணி :

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண். 3, வார்டு எண்.39 மற்றும் 40க்குட்பட்ட நியூடவுன் முத்துநகர் பகுதியில் அமைந்துள்ள கவுரு வாய்க்காலின் குறுக்கே இரண்டு பகுதிகளையும் இணைக்கும் வகையில் 5 மீட்டர் அகலமுள்ள உயர்மட்ட பாலம் கட்டும் பணியினை ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறுவதற்கு, ஆணையர் அவர்களின் தீர்மானம் எண். 43, நாள்.24.06.2023ல் அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி திட்டப்பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.21062/2023/S S 2 நாள்.30.08.2023ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளின் படி, மூலதன மான்ய நிதி (CGF 2023–24 Phase II) –யின் கீழ், மதிப்பீடு ரூ.1.31 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 239/ 2023–24 நாள்.10.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 16.10.2023 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

12. இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிரவல் மான்ய நிதி
(O&M Gap Filling Fund 2023 –24)

இத்திட்டத்தின் கீழ், ரூ.2.50 கோடிக்கு கீழ்க்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 23.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி ஏற்பளிப்பு கடிதம் 07.02.2024 அன்று வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்.	பணியின் பெயர்	மதிப்பீடு (ரூ. கோடியில்)
1.	பாதாள சாக்கடை உந்து நிலையங்களில் மின்மோட்டார்கள் (60HP – 01 No / 80 HP – 2 Nos.) பொருத்தி இயக்கும் பணி.	1.30
2.	ஆளவந்தான் படித்துறை நீரேற்று நிலையத்தில் 150 குதிரை திறன் கொண்ட டர்பைன் மின்மோட்டார் பொருத்தி இயக்கும் பணி.	1.20
	மொத்தம்	2.50

13. ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM) , சீர்மிகு நகர திட்டம் மற்றும் மாநில நகர்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (SUIDF) யின் கீழ், மின் சக்தி சேமிப்பு திறன் கொண்ட எல்.இ.டி தெருவிளக்குகள் அமைக்கும் பணி.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஐந்து மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை ஒருங்கிணைந்த நகர்புற அபிவிருத்தித் திட்டம் (IUDM)_ பொது/தனியார் பங்களிப்பு PPP (Public Private Partnership) முறையில் 40 வாட்ஸ் குழல் விளக்குகள் – 27915 எண்கள் 20 வாட்ஸ் எல்.இ.டி மின் விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் மின் ஆற்றல் தணிக்கை செய்தல் மற்றும் மின் சக்தி சேமிப்பு உபகரணங்களை பொருத்தி, இயக்கி பராமரிக்கும் பணிகளை, பத்தாண்டுகள் மேற்கொள்ள தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ்

பல்வேறு திறன் கொண்ட 9080 எண்கள் எல்.இ.டி மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது மாநில நகர்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (SUIDF) கீழ் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட மற்றும் தெருவிளக்குகள் விடுபட்ட பகுதிகளில் மொத்தம் 6264 எண்கள் எல்.இ.டி மின் விளக்குகள் ரூ. 13.97 கோடி மதிப்பீட்டில் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

தற்பொழுது உள்ள தெருவிளக்குகளின் விபரம்

வ.எண்	தெருவிளக்குகளின் வகை	எண்ணிக்கை
1	20 W எல்.இ.டி மின்விளக்குகள்	31504
2	40 W எல்.இ.டி மின்விளக்குகள்	613
3	72 W எல்.இ.டி மின்விளக்குகள்	21
4	90 W எல்.இ.டி மின்விளக்குகள்	8547
5	120 W எல்.இ.டி மின்விளக்குகள்	3370
6	150 எல்.இ.டி மின்விளக்குகள்	5
7	200 எல்.இ.டி மின்விளக்குகள்	30
8	10 மீட்டர் உயர் மின் கோபுர விளக்குகள்	17
9	16 மீட்டர் உயர் மின் கோபுர விளக்குகள்	60
10	30 மீட்டர் உயர் மின் கோபுர விளக்குகள்	03
	மொத்தம்	**44170**

14. தேசிய நகர்புற சுகாதாரத் திட்டம் 2023–24 (NUHM)

இத்திட்டத்தின் கீழ், தலா ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 எண்ணிக்கையில் புதிய நகர்புற ஆரம்ப சுகாதார மையங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெறவுள்ளது மற்றும் தலா ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில், 2 எண்ணிக்கையில் கூடுதல் நகர்புற ஆரம்ப சுகாதார மையங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெறவுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ், தலா ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில், 10 எண்ணிக்கையில் துணை சுகாதார மையங்கள் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி, பணிகள் நடைபெறவுள்ளது.

வ. எண்.	பணிகளின் பெயர்	மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)
1	வார்டு எண். 01க்குட்பட்ட (ஸ்ரீரங்கம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு) மேலூர் பகுதியில் கூடுதல் ஆரம்ப துணை சுகாதார மையம் கட்டும் பணி	30.00
2	வார்டு எண்.06க்குட்பட்ட (திருவானைக் கோவில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு) திருவானைக் கோவில் பகுதியில் கூடுதல் ஆரம்ப துணை சுகாதார மையம் கட்டும் பணி	30.00
3	வார்டு எண்.37க்குட்பட்ட (கீழரண்சாலை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு) அரியமங்கலம் கிராமத்தில் கூடுதல் ஆரம்ப துணை சுகாதார மையம் கட்டும் பணி	30.00
4	வார்டு எண்.36க்குட்பட்ட (காட்டூர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு) கீழ அம்பிகாபுரம் பகுதியில் கூடுதல் ஆரம்ப துணை சுகாதார மையம் கட்டும் பணி	30.00
5	வார்டு எண்.46க்குட்பட்ட (மேல கல்கண்டார் கோட்டை (மருந்தகம்) நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு) கொட்டப்பட்டு ஜே ஜே நகர் பகுதியில் கூடுதல் ஆரம்ப துணை சுகாதார மையம் கட்டும் பணி	30.00
6	வார்டு எண்.40க்குட்பட்ட (திருவரம்பூர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு) மலைக்கோவில் பகுதியில் கூடுதல் ஆரம்ப துணை சுகாதார மையம் கட்டும் பணி	30.00
7	வார்டு எண்.57க்குட்பட்ட (எடமலைப்பட்டி புதூர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு) எடமலைப்பட்டி புதூர் பகுதியில் கூடுதல் ஆரம்ப துணை சுகாதார மையம் கட்டும் பணி	30.00
8	வார்டு எண்.64க்குட்பட்ட (காமராஜ் நகர் (மருந்தகம்) நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு) கே கே நகர் பகுதியில் கூடுதல் ஆரம்ப துணை சுகாதார மையம் கட்டும் பணி	30.00
9	வார்டு எண்.60க்குட்பட்ட (சுப்புரமணியபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு) காஜாமலை பகுதியில் கூடுதல் ஆரம்ப துணை சுகாதார மையம் கட்டும் பணி	30.00
10	வார்டு எண்.08க்குட்பட்ட (உறையூர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு) பாண்டமங்கலம் பகுதியில் கூடுதல் ஆரம்ப துணை சுகாதார மையம் கட்டும் பணி	30.00
11	வார்டு எண்.52க்குட்பட்ட பீமநகர் பகுதியில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி	60.00
12	வார்டு எண்.30க்குட்பட்ட தென்னூர் பகுதியில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி	60.00
13	வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூர் பகுதியில் புதிய நகர்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம் கட்டும் பணி.	120.00
14	வார்டு எண்.01க்குட்பட்ட ஸ்ரீரங்கம், லட்சுமி நகர் பகுதியில் புதிய நகர்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம் கட்டும் பணி.	120.00

15	வார்டு எண்.39க்குட்பட்ட பாப்பாக்குறிச்சி மெயின் ரோடு, வடக்கு காட்டூர் பகுதியில் புதிய நகர்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டிடம் கட்டும் பணி.	120.00

15. மூலதன நிதி (Capital Grant Fund 2023 –24)

இத்திட்டத்தின் கீழ், ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் பிராட்டியூர் பகுதியில் நவீன எரிவாயு தகன மேடை கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம், நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தற்பொழுது பணிகள் நடைபெற்று வருகிறது.

16. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி TURIP- 2023-24

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.4548/2023/எஸ்எஸ்1 நாள்.31.05.2023ல் ரூ.103.73 கோடி மதிப்பீட்டில் (முழு மான்யம் ரூ.103.73 கோடி) சாலை பணிகள் 82 தொகுப்புகளில் 1706 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தற்போது, 1033 பணிகள் ரூ.30.12 கோடி செலவில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

17. நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் NSMT- 2023-24

திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்புக்குழுவின் அனுமதி நாள்.29.05.2023ல் ரூ.5.74 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகள் 7 தொகுப்புகளில் 79 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தற்போது, 37 பணிகள் ரூ.1.00 கோடி செலவில் முடிக்கப்பட்டு. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

18. மாநில நிதிக்குழு மான்யம் (SFC–URDF)- 2023-24

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.4549/2023/S S 2 நாள்.15.05.2023ல் ரூ.21.09 கோடி மதிப்பீட்டில் (முழு மான்யம் ரூ.21.09 கோடி) சாலை பணிகள் 15 தொகுப்புகளில் 235 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தற்போது, 207 பணிகள் ரூ.15.53 கோடி செலவில் முடிக்கப்பட்டு. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

19. டார்மெண்ட் அக்கௌண்ட் மற்றும் வட்டி நிதி (Dormant A/c and Interest Fund)- 2023-24

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.20499/2023/SS3 நாள்.21.06.2023ல் ரூ.57.42 கோடி மதிப்பீட்டில் (முழு மான்யம் ரூ.57.42 கோடி) சாலை பணிகள் 35 தொகுப்புகளில் 586 பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தற்போது, 355 பணிகள் ரூ.21.31 கோடி செலவில் முடிக்கப்பட்டு. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

20. நமக்கு நாமே திட்டம் 2023–2024

நமக்கு நாமே திட்டத்தின் கீழ், அரசு மான்யம் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் கூடிய 26 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டதில் 13 பணிகள் முடிவுற்று, மீதமுள்ள 13 பணிகள் நடைபெற்று வருகிறது.

(ரூ. இலட்சத்தில்)

வ. எண்.	பணிகளின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை	அரசு மான்யம்	பொது மக்களின் பங்களிப்பு
1	வார்டு குழு அலுவலகம் 1, வார்டு எண்.5, அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்ட–டேஸ்வரி திருக்கோவில் முன்புறம் உள்ள தெப்பக் குளத்திற்கு மலட்டாறு வாய்க்கால் பகுதியிலிருந்து குளம் வரை குழாய் பதித்து குளத்திற்கு தண்ணீர் நிரப்பும் பணி	48.00	32.00	16.00
2	வார்டு குழு அலுவலகம் 3, வார்டு எண்.41 திருவெறும்பூர் முள்ளிக் குளத்தில் நுண் மணல் அகற்றி தூர்வாருதல் மற்றும் வாய்க்காலில் தாங்கு சுவர் அமைக்கும் பணி (50% பங்களிப்பு)	20.00	10.00	10.00
3	வார்டு குழு அலுவலகம் 4, வார்டு எண். 53க்குட்பட்ட வார்னர்ஸ் சாலை வாய்க்காலின் கிழக்கு பகுதியில் தடுப்பு சுவர் கட்டும் பணி	50.00	25.00	25.00
4	வார்டு குழு அலுவலகம் 4, வார்டு எண். 53க்குட்பட்ட வார்னர்ஸ் சாலை வாய்க்காலின் மேற்கு பகுதியில் தடுப்பு சுவர் கட்டும் பணி	50.00	25.00	25.00
5	வார்டு குழு அலுவலகம் 4, வார்டு எண் 61க்குட்பட்ட சிவாஜி நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு ரோடுகளில் மைய சுடு கலவை பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி	29.10	19.40	9.70
6	வார்டு குழு அலுவலகம் 4, வார்டு எண் 57க்குட்பட்ட குட்டிமலை பகுதியில் மைய சுடு கலவை பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி U C 086057R3359	29.10	19.40	9.70
7	வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண் 47 புதுக்கோட்டை மெயின் சாலையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனையை சுற்றியுள்ள (2வது பாகம் – கிழக்கு) சுற்றுச்சுவரில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஓவியங்கள் வரையும் பணி	8.60	5.73	2.87
8	வார்டு குழு அலுவலகம் 1, வார்டு எண் 6க்குட்பட்ட தாத்தாச்சாரியார் கார்டன் கிழக்கு விஸ்தரிப்பு பகுதி மனைப்பிரிவில் பாதாள சாக்கடை பிரதான குழாய் மற்றும் கழிவுநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கும் பணி	8.40	5.60	2.80

9	வார்டு குழு அலுவலகம் 1, வார்டு எண் 6க்குட்பட்ட தாத்தாச்சாரியார் கார்டன் கிழக்கு விஸ்தரிப்பு பகுதி மனைப்பிரிவில் குடிநீர் விநியோக குழாய் பதிக்கும் பணி	2.80	1.87	0.93
10	வார்டு குழு அலுவலகம் 5, வார்டு எண்.28 மற்றும் 29க்குட்பட்ட தென்னூர் மேம்பாலத்தின் கீழ் பகுதியில் அமைந்துள்ள திறவிடத்தினை அழகுபடுத்துவதற்காகவும், பொழுதுபோக்கு அம்சங்கள் ஏற்படுத்தி பொதுமக்கள் உபயோகிக்கும் வகையில் நடைபாதை, சிறு திறந்தவெளி அரங்கம், செடிகள் மற்றும் வண்ண விளக்குகள் அமைக்கும் பணி	41.50	27.67	13.83
11	வார்டு குழு அலுவலகம் 3, வார்டு எண் 42க்குட்பட்ட சக்தி நகர் பகுதியில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி	3.60	1.80	1.80
12	வார்டு குழு அலுவலகம் 3, வார்டு எண் 16க்குட்பட்ட புதுத் தெரு வடக்கு உக்கடை மலையடிவாரம் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி U C 086016R0918	6.00	4.00	2.00
13	வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண் 30க்குட்பட்ட மதுரை ரோடு பாலக்கரை ரவுண்டானா பகுதியை அழகுபடுத்தும் பணி	6.00	4.00	2.00
14	வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண் 50க்குட்பட்ட பாலக்கரை இரயில்வே மேம்பாலம் மேற்கு பக்கம் வர்ணம்செய்யும் பணி	6.75	4.50	2.25
15	வார்டு குழு அலுவலகம் 3, அரசு ஆதி திராவிடர் நடுநிலைப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளின் பயன்பாட்டிற்கு 200 எண்ணிக்கையிலான பெஞ்சு மற்றும் டெஸ்க் வாங்கும் பணி	32.00	21.33	10.67
16	வார்டு குழு அலுவலகம் 2, வார்டு எண் 53க்குட்பட்ட பிராமினேட் ரோடு குறுக்கு தெருவில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி	9.00	6.00	3.00
	மொத்தம்	**350.85**	**213.30**	**137.55**

21. ஒருங்கிணைந்த பேருந்து முனையம் – I & A நிதி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டும் பணி, பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம், கனரக சரக்கு வாகன முனையம் கட்டும் பணி, சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு, முதற்கட்ட அனுமதி, அரசாணை (டி) எண்.497 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.28.12.2021ல் வழங்கப்பட்டது.

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை பின்வருமாறு தயார் செய்யப்பட்டதில், அரசாணை (4டி) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.சி.2) நாள்.23.06.2022ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது.

வ. எண்.	திட்டப்பணிகளின் விபரம்	மதிப்பீடு (ரூ. கோடியில்)
1.	பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டும் பணி மற்றும் பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம் கட்டும் பணி (Multi Utility Facilities Centre).	243.78

2.	பஞ்சப்பூரில் கனரக சரக்கு வாகன முனையம் கட்டும் பணி (Truck Terminal) மற்றும் சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள். (Roads, SWD and other Infrastructure facilities) வழங்கும் பணி	106.20
	மொத்தம்	**349.98**

மேற்கண்ட பணிகளுக்கு முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந. க. எண். 001/2022/D01 நாள்.07.07.2022ல் தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 10.10.2022 அன்று கட்டுமானப்பணி துவங்கப்பட்டு, இது வரை ரூ.288.30 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டு, திட்டப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

24. தாங்குச் சுவர் கட்டும் பணி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண்.5, வார்டு எண்.08க்குட்பட்ட சோழம்பாறை சாலை வாய்க்காலில் (குடமுருட்டி ஆற்று அருகில்) ஸ்லூயிஸ் வால்வுடன் (Sluice Valve) கூடிய தடுப்புசுவர் மற்றும் நீர் சேகரிப்பு கிணறு அமைக்கும் பணியினை ரூ.2.46 கோடி மதிப்பீட்டில் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி(I & A Fund) 2022-23ம் ஆண்டு நிதியின் கீழ், முழு மான்யத்துடன் மேற்கொள்ள அரசாணை நிலை எண்.27 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 22.02.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பணி மேற்கொள்ளப்பட்டு, இது வரை ரூ.2.03 கோடி செலவிடப்பட்டு, பணி முடிவடைந்துள்ளது.

25. மாரீஸ் தியேட்டர் அருகில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், வார்டு எண்.13க்குட்பட்ட கோட்டை ஸ்டேஷன் சாலையினையும், வார்டு எண்.11க்குட்பட்ட உறையூர் செல்லக்கூடிய சாலையினையும் இணைக்கும் கோட்டை புகைவண்டி நிலைய, இருப்புப்பாதை மேம்பாலம் 1866-ஆம் ஆண்டு கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இப்பாலம் கட்டப்பட்டு 151 வருடங்கள் கடந்துவிட்டதால், போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் இல்லை எனவும், இந்த இருப்புப்பாதை மேம்பாலத்தில், அதிகளவு கனரக வாகனங்களும், இலகுரக வாகனங்களும் சென்று வருவதால், இப்பாலத்தினை விரிவாக்கம்

செய்து, அணுகு சாலை அமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு தென்னக இருப்புப்பாதை நிர்வாகமும், மாநகராட்சியும் 50 : 50 சதவீதத்தில் பங்கீடு செய்து கொள்வதற்கு தென்னக இருப்புப்பாதை, சென்னை அவர்களின் கடிதம் எண். W.352 /T/149 நாள். 07.06.2018 ம் தேதியில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பணியினை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.33090/2019/டிபி 3 நாள்.02.01.2020 ல் உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் (Infrastructure & Amenities Fund) நிதியின் கீழ் மேற்கொள்ளுமாறு அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மண்டலம் 1, வார்டு எண்.13க்குட்பட்ட மாரீஸ் தியேட்டர் அருகில் இருப்புப்பாதை மேம்பாலம் கட்டும் பணியினை (Rail Over Bridge) ரூ.34.10 கோடி திட்ட மதிப்பீட்டில், முழு மான்யத்துடன் மேற்கொள்வதற்கு, அரசாணை நிலை எண்.27 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 22.02.2023ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 579/2022– 23 நாள்.05.04.2023 வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தக்காரருக்கு 28.07.2023 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

26. SBM 2.0 திட்டம்

தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2022–2023

தூய்மை இந்தியா (SBM 2.0) 2022–2023, திட்டத்தின் கீழ், தனிநபர் கழிப்பிடம், புதிதாக சமுதாய கழிப்பிடம், நவீன கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண். 18856/2022/தூஇதி 2 –நாள். 13.07.2022ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக சமுதாய கழிப்பிடம் மற்றும் நவீன கழிப்பிடங்களை கட்டும் பணிகளுக்கு பின்வருமாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மாமன்ற தீர்மானம் எண்.290 நாள்.29.11.2022ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு,

27.12.2022ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, தற்பொழுது அனைத்து பணிகளும் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வ. எண்	திட்டப்பணிகளின் விபரம்	மதிப்பீடு (ரூ இலட்சத்தில்)
	பொது கழிப்பிடங்கள் (2022–2023)	
1	வார்டு எண்.58க்குட்பட்ட கிராப்பட்டி முஸ்லீம் தெரு பகுதியில் புதிய பொது கழிப்பிடம் கட்டும் பணி (12 இருக்கைகள்)	30.00
	மொத்தம்	30.00
	சிறுநீர் கழிப்பிடங்கள் (2022_2023)	
1	வார்டு எண்.58க்குட்பட்ட கிராப்பட்டி முஸ்லீம் தெரு பகுதியில் புதிய சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டும் பணி (4 இருக்கைகள்)	1.28
	மொத்தம்	31.28

மேலும், கீழ்கண்ட பணிகளை SBM 2.0 திட்டத்தின் கீழ், மேற்கொள்வதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.41 நாள்.31.01.2023ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, மேற்படி திட்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணி உத்தரவுகள் வழங்கப்பட்டு, பணிகள் அனைத்தும் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வ. எண்	திட்டப்பணிகளின் விபரம்	மதிப்பீடு (ரூ இலட்சத்தில்)
	சமுதாய கழிப்பிடங்கள் (2022–2023)	
1	வார்டு எண்.65க்குட்பட்ட பசுமை நகர் பகுதியில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டுதல் (12 இருக்கைகள்) மற்றும் சிறுநீர் கழிப்பிடம்கட்டும் பணி (4 இருக்கைகள்)	31.28

2	வார்டு எண்.55க்குட்பட்ட பிராட்டியூர் இடுகாடு அருகில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டுதல் (12 இருக்கைகள்) மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (4 இருக்கைகள்)	19.28
	மொத்தம்	50.56

தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2023-2024

சமுதாயக் கழிப்பிடம் (2023-24)

தூய்மை இந்தியா (SBM 2.0) 2023-2024, திட்டத்தின் கீழ், தனிநபர் கழிப்பிடம், புதிதாக சமுதாய கழிப்பிடம், நவீன கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணிக்கு மாமன்ற தீர்மானம் எண். 227 நாள். 27.04.2023ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது.

வ. எண்	திட்டப்பணிகளின் விபரம்	மதிப்பீடு (ரூ இலட்சத்தில்)
	சமுதாயக் கழிப்பிடங்கள் (2023-2024)	
1	வார்டு எண்.13க்குட்பட்ட காந்தி நகர் வெனீஸ் தெரு பகுதியில் புதிய பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி	31.60
	மொத்தம்	31.60

மேற்படி இப்பணிக்கு, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.133/2023-24 நாள். 13.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, 31.08.2023 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, மேற்படி பணி ரூ.30.84 இலட்சம் செலவில் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

பொதுக் கழிப்பிடம் (2023-24)

தூய்மை இந்தியா (SBM 2.0) 2023-2024, திட்டத்தின் கீழ், தனிநபர் கழிப்பிடம், புதிதாக சமுதாய கழிப்பிடம் , நவீன கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் எண். 5990/2022/தூஇதி 2 - நாள். 08.09.2023ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

வ. எண்	திட்டப்பணிகளின் விபரம்	மதிப்பீடு (ரூ இலட்சத்தில்)
	பொதுக் கழிப்பிடங்கள் (2023-2024)	
1	வார்டு எண்.02க்குட்பட்ட ஸ்ரீரங்கம் வடக்கு உத்திர வீதியில் புதிதாக நவீன கழிப்பிடம் கட்டும் பணி (14 எண்ணிக்கை 4 சிறுநீர் கழிப்பிடம்)	35.30
2	வார்டு எண்.02க்குட்பட்ட ஸ்ரீரங்கம் கீழ உத்திர வீதியில் புதிதாக நவீன கழிப்பிடம் கட்டும் பணி (14 எண்ணிக்கை + 4 சிறுநீர் கழிப்பிடம்)	35.30
3	வார்டு எண்.47க்குட்பட்ட சுந்தர்ராஜ் நகர் பகுதியில் பொதுக்கழிப்பிடங்கள் கட்டும் பணி (12 எண்ணிக்கை + 4 சிறுநீர் கழிப்பிடம்)	29.30
	மொத்தம்	99.90

மேற்கண்ட பணிகளை SBM 2.0 திட்டத்தின் கீழ், மேற்கொள்வதற்கு மாமன்றத் தீர்மானம் எண்.828 நாள்.30.11.2023ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

SBM 2.0 திட்டம் _ திடக்கழிவு மேலாண்மை

SBM 2.0 திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	பணி	மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்)	தற்போதைய நிலை
1.	கட்டிடக் கழிவுகளை அகற்ற கட்டிட இடிபாடுகள் செயலாக்க மையம் அமைக்கும் பணி C&D Collection, Transportation, Processing and Management of C&D Wasteதிட்டத்தினை DBFOT முறையில் மேற்கொள்ள, கட்டிட இடிபாடுகள் செயலாக்க மையம் (50MT அளவில்) அமைக்கும் பணி	6.00	ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது
2.	இயந்திரமயமாக்கப்பட்ட சாலை சுத்தம் செய்யும் நவீன வாகனம் (Mini Road Sweeper) –1 எண்ணிக்கை கொள்முதல் செய்யும் பணி	00.30	வாகன கட்டுமானப் பணி நடைப்பெற்று வருகிறது

27. பதினைந்தாவது நிதிக்குழு பரிந்துரை நிதி 2023–2024 –15th CFC

இத்திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதிக்குள் காற்றின் தரம் மேம்படுத்துதல் பணிகளை மேற்கொள்ளவும் 2023 – 2024–ம் ஆண்டில் ஒதுக்கீடு செய்த தொகை ரூ.10.80 கோடி மத்திய அரசிடமிருந்து நிதி பெறப்பட்டு, கீழ்கண்டவாறு பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு (ரூ.கோடியில்)	பணியின் தற்போதைய நிலை
காற்றின் தரம் மேம்படுத்துதல்			
1	சாலை அகலம் முழுவதும் தார் தளம் அமைத்தல் – 5 தொகுப்புகள்	10.80	பணி துவங்கப்படவுள்ளது
	மொத்தம்	10.80	

28. தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் 2022 –23

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண்.5, வார்டு எண்.26க்குட்பட்ட அண்ணல் காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் இடவசதி இல்லாமல் அவதியுற்று வருவதால், மேற்படி இடத்தில் தங்கும் விடுதி கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.99.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்ட நிதியில் மேற்கொள்ள அனுமதி கோரி

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண். 20800/2021/ UPA Dated 13.10.2022 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கு, பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்ட பணிக்கு இதுநாள் வரை ரூ.49.48 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி சீர்மிகு நகரத் திட்டம் – (Smart City Mission)

திருச்சிராப்பள்ளி நகரினை சீர்மிகு நகரமாக மாற்றுவது குறித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து, மத்திய அரசுக்கு 31.03.2017 அன்று சமர்ப்பிக்கப்பட்டு, மத்திய அரசு அலுவலக ஆணை எண்.K-15016/157/2015– SC-1, நாள்.28.06.2017–ன்படி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி "சீர்மிகு நகரத் திட்டத்தினை" (Smart City Mission) செயல்படுத்த உகந்த நகரமாக தேர்வு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, இத்திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு "தனி நோக்கு அமைப்பு" **(Special Purpose Vehicle)** அமைக்க அரசாணை எண்.109 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.10.2017ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனிநோக்கு அமைப்பிற்கான நிறுவனம் அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு 22.12.2017 அன்று இந்திய நிறுவனங்களின் சட்டம் 2013ன் கீழ் திருச்சிராப்பள்ளி சீர்மிகு நகர நிறுவனம் என்ற பெயருடன் கூடிய நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 83 பணிகள் ரூ.965.17 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டதில், 78 பணிகள் முடிவுற்று மீதள்ள 5 பணிகள் நடைபெற்று வருகிறது.

1. **பெரியார் நகர், கம்பரசம்பேட்டை நீர்சேகரிப்பு கிணற்றில் புதிதாக நீள்சுற்று வட்டக் குழாய்கள் அமைத்தல், புதிதாக மோட்டார் பம்பு செட் மற்றும் டீசல் ஜெனரேட்டர் அமைத்தல் (தொகுப்பு எண்.1)**

பெரியார் நகர் நீர்ப்பணி நிலையம், அய்யாளம்மன் படித்துறை தலைமை நீர்ப்பணி நிலையம் புனரமைத்தல், தலைமை நீர்ப்பணி நிலையம்– infiltration well புனரமைத்தல் – 4

எண்கள், டர்பைன் நீர்ப்பணி நிலையம் –2 எண்கள், புதிதாக மின்மோட்டார் அமைத்தல், புதிதாக 6 எண்ணிக்கை டீசல் ஜெனரேட்டர் வாங்குதல், பெரியார் நகர் மின்மோட்டார் மாற்றியமைத்தல் (HT motor) – 2 பணிகள் ஆகிய பணிகள் ரூ.9.33 கோடி மதிப்பீட்டில் எடுத்து கொள்ளப்பட்டு, 85 சதவீத பணிகள் முடிவுற்ற நிலையில் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.7.46 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி ஜீன்–2024க்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

2. பெரியார் நகர் நீர்சேகரிப்பு கிணறு – கம்பரசம்பேட்டையிலிருந்து, அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD Area) உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு புதிதாக 17.50 கி.மீட்டர் நீளத்திற்கு குடிநீர் உந்துக் குழாய் பதித்தல் (தொகுப்பு எண்.3)

அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் (ABD Area) 17.459 கி.மீ குடிநீர் உந்துக் குழாய் பதித்தல் பணிகள் ரூ.21.58 கோடி மதிப்பீட்டில், எடுத்து கொள்ளப்பட்டு, 12.897 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது. 85 சதவீத பணிகள் முடிவுற்ற நிலையில் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.16.04 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி மார்ச்–2024க்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

3. வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய்கள் புனரமைக்கும் பணி – பகுதி–1, 2 & 2 ஏ– தொகுப்பு–1 ஏ

வரையறுக்கப்பட்ட பகுதி – 1, 2, 2 ஏ–ல் ரூ.70.76 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை குழாய் புனரமைக்கும் பணிகள் எடுத்து கொள்ளப்பட்டு, கழிவுநீர் குழாய் – 59.992 கி.மீ / 52.305 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது, வீட்டிணைப்புகள் – 19985/ 8403 வழங்கப்பட்டுள்ளன, ஆள்நுழைவு தொட்டிகள் – 2943/2353 முடிக்கப்பட்டுள்ளன. சாலையோர உந்து நிலையம் – 4/3 எண்கள் நடைபெற்று வருகிறது, பிரதான கழிவுநீர் உந்து குழாய் – 0.978 கி.மீ/0.64 மீட்டர் பதிக்கப்பட்டுள்ளது. 81 சதவீத பணிகள் முடிவுற்ற நிலையில் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.44.40 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி மார்ச்–2024க்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

4. வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய்கள் புனரமைக்கும் பணி – பகுதி–3 & 4– தொகுப்பு–1 பி

வரையறுக்கப்பட்ட பகுதி – 3, 4–ல் ரூ.62.03 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை குழாய் புனரமைக்கும் பணிகள் எடுத்து கொள்ளப்பட்டு, கழிவுநீர் குழாய் – 59.813 கி.மீ / 54.515 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது, வீட்டிணைப்புகள் – 14843/ 7964 வழங்கப்பட்டுள்ளன. ஆள்நுழைவு தொட்டிகள் – 2670/2400 எண்கள் முடிக்கப்பட்டுள்ளன, சாலையோர உந்து நிலையம் – 3/3 எண்கள் நடைபெற்று வருகிறது, பிரதான கழிவுநீர் உந்து குழாய் – 3.300 கி.மீ/ 0.202 மீட்டர் பதிக்கப்பட்டுள்ளது. 80 சதவீத பணிகள் முடிவுற்ற நிலையில் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.43.27 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி மார்ச்–2024க்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

5. வரையறுக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய்கள் புனரமைக்கும் பணி – பகுதி–5 & 6 – தொகுப்பு–1 சி

வரையறுக்கப்பட்ட பகுதி – 5, 6–ல் ரூ.77.51 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை குழாய் புனரமைக்கும் பணிகள் எடுத்து கொள்ளப்பட்டு, கழிவுநீர் குழாய் – 53.850 கி.மீ / 51.553 கி.மீ பதிக்கப் பட்டுள்ளது, வீட்டிணைப்புகள் – 9110/5944 வழங்கப்பட்டுள்ளன, ஆள்நுழைவு தொட்டிகள் – 2325/2224 முடிக்கப்பட்டுள்ளன. சாலையோர உந்து நிலையம் – 1/1 எண் நடைபெற்று வருகிறது, பிரதான கழிவுநீர் உந்து குழாய் – 2.420 கி.மீ/0.99 மீட்டர் பதிக்கப்பட்டுள்ளது. 80 சதவீத பணிகள் முடிவுற்ற நிலையில் மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை ரூ.47.67 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி மார்ச்–2024க்குள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.

2023 – 2024 ஆம் ஆண்டில் மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

1. சாலைப்பணிகள்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அனைத்து வார்டு குழு அலுவலக. ங்களுக்குட்பட்ட பகுதிகளிலும் மொத்தம் 143.98 கி.மீ நீளத்திற்கு தார்ச்சாலைகள் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள் ரூ.9060.81 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. நவீன சிறுநீர் கழிப்பிடம் கட்டுதல் மற்றும் பொது கழிப்பிடம் கட்டுதல்

வார்டு குழு அலுவலகம் எண்.2, வார்டு எண்.18க்குட்பட்ட பொதுமக்கள் அதிகளவில் கூடுமிடமான காந்தி சந்தை கிழக்கு பகுதி, மீன் சந்தை எதிரில் தர்பார் மேட்டுச் சாலையில், ரூ.12.05 இலட்சம் செலவில் சிறுநீர் கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளது.

வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.53க்குட்பட்ட குதுப்பா பள்ளம் பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்தில் ரூ.20.90 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.62க்குட்பட்ட அருந்ததியர் தெருப் பகுதியில் உள்ள பொது கழிப்பிடம் ரூ.15.30 இலட்சம் செலவில் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. நகர்புற ஆரம்ப சுகாதார நிலையப் பணிகள்

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.28க்குட்பட்ட குழுமிக்கரை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேவையான தளவாடச் சாமான்கள் ரூ.8.38 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, வழங்கப்பட்டுள்ளது.

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.9க்குட்பட்ட உறையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.80.39 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.57க்குட்பட்ட ராஜீவ் காந்தி நகர் பகுதி, நகர் நல மையத்தில் ரூ.8.58 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.58க்குட்பட்ட கிராப்பட்டி பகுதி, நகர் நல மையத்தில் ரூ.8.84 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.28க்குட்பட்ட குழுமிக்கரை பகுதியில் ரூ.54.64 இலட்சம் செலவில் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டப்பட்டுள்ளது.

4. வெள்ள நிவாரணப் பணிகள்

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.8, குடமுருட்டி வாய்க்கால் அருகில், ஏ.யு.டி காலனியில் வெள்ளத் தடுப்பு பணிக்காக ரூ.24.65 இலட்சம் செலவில் ஸ்லூயிஸ் வால்வுடன் (Sluice Valve) கூடிய வெள்ளத் தடுப்புசுவர் மற்றும் சேகரிப்பு கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.62, கிருஷ்ணாபுரம் பகுதியில் வெள்ளத் தடுப்பு பணிக்காக ரூ.37.73 இலட்சம் செலவில் மோட்டார் அறை கட்டப்பட்டுள்ளது.

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.11, குடமுருட்டி வாய்க்கால் அருகில், கோணக்கரை பகுதியில் வெள்ளத் தடுப்பு பணிக்காக ரூ.191.60 இலட்சம் செலவில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5. நுண் உரக் கூடம் கட்டுதல்

வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.65, பசுமை நகர் நுண் உரக்கூடத்தில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி ரூ.15.21 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

வார்டு குழு அலுவலகம் எண்.1, வார்டு எண்.4க்குட்பட்ட அம்பேத்கார் நகர் நுண் உரக்கூடத்தில் ரூ.9.94 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

வார்டு குழு அலுவலகம் எண்.2, வார்டு எண்.18, பூக்கொல்லை நுண் உரக்கூடத்தில் மேம்பாட்டுப் பணிகள் ரூ.9.44 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

6. மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகள்

மாநகராட்சிப் பகுதிகளில் செல்லும் வாய்க்கால்கள் மற்றும் மழைநீர் வடிகால்களில் உள்ள மண் துகள்கள் மற்றும் குப்பைகள் அகற்றும் பணிகள் மொத்தம் ரூ.420.57 இலட்சம் செலவில் தூர்வாரும் பணிகள் மேறகொள்ளப்பட்டுள்ளது.

7. மழைநீர் வடிகால்கள் அமைத்தல் மற்றும் மராமத்துப் பணிகள்

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 29.15 கி.மீ நீளத்திற்கு புதிதாக மழைநீர் வடிகால்கள் ரூ.859.55 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது மற்றும் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்களில், சுமார் 26.04 கி.மீ நீளத்திற்கு மராமத்துப் பணிகள் ரூ.675.06 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8. மயான மேம்பாட்டு பணிகள்

வார்டு குழு அலுவலகம் எண்.1, வார்டு எண்.1, மேலூர் செம்படவர் தெருவில் ரூ.11.37 இலட்சம் செலவில் ஈமக்கிரியை செய்வதற்கான மண்டபம் கட்டப்பட்டது.

9. நாய் கருத்தடை அறுவை சிகிச்சை மையம்

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.11, கோணக்கரை பகுதியில் உள்ள நாய் கருத்தடை அறுவை சிகிச்சை மையத்தைச் சுற்றிலும் ரூ.24.35 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது.

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.11, கோணக்கரை எரியூட்டு மைய வளாகத்தில் கால்நடை காப்பகம் ரூ.20.72 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது.

வார்டு குழு அலுவலகம் எண்.3, வார்டு எண்.36, அரியமங்கலம் உரக்கிடங்கில் ரூ.51.00 இலட்சம் செலவில் நாய் கருத்தடை அறுவை சிகிச்சை மையம் கட்டப்பட்டுள்ளது.

10. பூங்கா பணிகள்

வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.45, அசோக் நகர் பூங்கா பகுதியில் பேவர் ப்ளாக்குகள் பதித்தல், குடிநீர் வசதிகள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல், உடற்பயிற்சி மேற்கொள்வதற்கான உபகரணங்கள் வழங்குதல் போன்ற பணிகள் ரூ.23.96 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வார்டு குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.65, ராணி மெய்யம்மை நகர் பூங்கா பகுதியில் பாதசாரிகள் நடைபாதை அமைத்தல் மற்றும் வேலி அமைக்கும் பணிகள் ரூ.19.95 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

11. சாலைப் பணிகள்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பழுதடைந்த சாலைகளை சீரமைப்பதற்கும் மற்றும் தார்பேட்ச் பணிகள் மொத்தம் 116 பணிகள் ரூ.1830.79 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 60 பணிகள் முடிவுற்று, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

12. இரும்பு நடைபாலம் கட்டும் பணி

மண்டலம் எண்.5, வார்டு எண்.8, காராயி அம்மன் கோவில் அருகில், குடமுருட்டி ஆற்றின் குறுக்கே பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இரும்பு நடைபாதை பாலம் அமைக்கும் பணி ரூ.165.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவடைந்துள்ளது.

13.புத்தக கண்காட்சி திருவிழா

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, தூய வளனார் கல்லூரி வளாகத்தில், மாநகர் வாழ் புத்தகம் விரும்பும் மக்களின் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு, திருச்சி புத்தக கண்காட்சி திருவிழா 2023 நடத்துவதற்கு, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் ரூ.19.85 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

கல்வி நிதி

2023-24ம் ஆண்டில் கல்வி நிதியின் கீழ் ரூ.21.50 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

01.	வார்டு எண்.57க்குட்பட்ட எடமலைப்பட்டிப்புதூர் காளியம்மன் கோவில் தெருவில் மாநகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி ஆகியவை ஒரே வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி பள்ளிகளில் தனியார் பள்ளிகளுக்கு இணையாக மாணவர்கள் சேர்க்கை இருப்பதால், அதற்கேற்ப கூடுதல் வசதிகள் வழங்கும் பொருட்டு, எடமலைப்பட்டிபுதூர் ராஜீவ் காந்தி நகரில் உயர்நிலைப் பள்ளிக்கென தனியாக ஒரு புதிய பள்ளி கட்டும் பணி ரூ.990.00 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.
02.	வார்டு எண்.55க்குட்பட்ட பிராட்டியூர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி ரூ.485.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெறுகிறது.
03.	வார்டு எண்.64 க்குட்பட்ட கே. கே. நகர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியின் இரண்டாம் தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி ரூ.49.80 இலட்சத்தில் நடைபெற்று வருகிறது.
04.	வார்டு எண்.63 க்குட்பட்ட கே. சாத்தனூர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் அலுவலக கட்டிடம் கட்டுதல் மற்றும் இருகட்டிடங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் மேற்கூரை அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.31.80 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
05.	வார்டு எண்.62க்குட்பட்ட பஞ்சப்பூர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளி வளாகத்தின் உள்ளே ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி ரூ.45.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
06.	வார்டு எண்.27க்குட்பட்ட வண்ணாரப்பேட்டை, மாநகராட்சி தொடக்கப் பள்ளியின் இரண்டாம் தளத்தில் புதிதாக மூன்று வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் இப்பள்ளியின் மேற்கு பகுதியில் புதிதாக சுற்றுச்சுவர் கட்டுதல் ஆகிய பணிகள் ரூ.59.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
07.	வார்டு எண்.12க்குட்பட்ட கொச மேட்டுத் தெரு, மாநகராட்சி தொடக்கப் பள்ளிக்கு தரைதளத்தில் புதியதாக மூன்று வகுப்பறைகள், தலைமையாசிரியர் அறை, கழிவறை ஆகியவற்றை கட்டும் பணி ரூ.58.30 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

08.	வார்டு எண்.23க்குட்பட்ட ஆப்பக்காரத் தெருவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களுக்கு (எண்.304, 305 & 307) வகுப்பறை கட்டும் பணி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
09.	வார்டு எண்.13க்குட்பட்ட பட்டர்வொர்த் சாலை, மாநகராட்சி தொடக்கப் பள்ளி வளாகத்தில், செயல்பட்டு வரும் சந்தோஷ் சிறப்பு பள்ளிக்கு தரைதளத்தில் புதியதாக மூன்று வகுப்பறைகள் கட்டும் பணி ரூ.28.30 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
10.	வார்டு எண்.9க்குட்பட்ட மேட்டுத் தெரு, பிரதான சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் மண் நிரப்புதல், மேடை அமைத்தல், உடற்பயிற்சி கூடம் அமைத்தல், பொருட்கள் வைப்பறை, கழிவறை மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல் ஆகிய மேம்பாட்டு பணிகள் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
11.	வார்டு எண்.9க்குட்பட்ட வாலாஜா ரோடு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் கூடுதலாக 4 வகுப்பறைகள் கட்டும் பணி.ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
12.	வார்டு எண்.27 – க்குட்பட்ட மூலைக்கொல்லைத் தெரு, மாநகராட்சி உருது துவக்கப் பள்ளிக்கு, தரை தளத்தில் புதிய பள்ளிக் கட்டிடம் கட்டும் பணி ரூ.59.30 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
13.	வார்டு எண்.27 – க்குட்பட்ட பென்சனர் தெருவில் செயல்பட்டு வரும் மாநகராட்சி கோசா துவக்கப் பள்ளிக்கு, தரை தளத்தில் புதிய பள்ளிக் கட்டிடம் கட்டும் பணி ரூ.59.60 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
14.	வார்டு எண்.29க்குட்பட்ட காயிதே மில்லத் நகரில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்கள். 206, 207 & 208 ஆகியவற்றிற்கு கட்டிடம் கட்டும் பணி ரூ.42.75 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
15.	வார்டு எண்.28க்குட்பட்ட புது மாரியம்மன் கோவில் தெருவில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.217, 218, 219 & 220 ஆகியவற்றிற்கு கட்டிடம் கட்டும் பணி ரூ.37.40 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
16.	வார்டு எண்.7க்குட்பட்ட கீதாபுரத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் மறுகட்டமைப்பு செய்யும் பணி ரூ.17.30 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.
17.	வார்டு எண்.50க்குட்பட்ட காஜாப்பேட்டை மெயின் ரோடு, மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் ரூ.51.30 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் நடைபெற்று வருகிறது.
	மொத்தம் ரூ.2149.65 இலட்சம்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களில் முந்தைய ஆண்டுகள் மற்றும் 2023–24ம் ஆண்டில் திட்ட மதிப்பீடுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகளுக்கு, 2023–2024ம் நிதியாண்டில் ரூ.4.55 கோடிக்கு கீழ்க்கண்டவாறு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2023–24ம் ஆண்டில் முடிவுற்ற பணிகள்

01	வார்டு எண்.57க்குட்பட்ட எடமலைப்பட்டிபுதூர் மாநகராட்சி உயர்நிலை பள்ளியில் ரூ.76.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டது.
02	வார்டு எண்.13க்குட்பட்ட பி.எஸ்.இந்து மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் ரூ.7.90 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

03	வார்டு எண்.13க்குட்பட்ட வெனிஸ் தெரு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண். 112ல் சமையலறை மற்றும் கழிப்பறை கட்டும் பணி ரூ. 12.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
04	வார்டு எண்.59க்குட்பட்ட காஜா நகர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மறுகட்டமைப்பு செய்யப்பட்டது.
05	வார்டு எண்.59க்குட்பட்ட இலுப்பூர் ரோடு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையத்தில் கழிப்பறை கட்டுதல், பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
06	வார்டு எண்.30 க்குட்பட்ட அரசு சையது முர்துசா மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள மைய சமையல் கூடத்திற்கு தேவையான பாத்திரங்கள் விநியோகம் செய்தல், பொருத்துதல் மற்றும் இயக்குதல் ஆகிய பணிகள் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
07	வார்டு எண் 64க்குட்பட்ட இச்சிகாமலைப்பட்டி ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையத்தைச் சுற்றிலும் இரும்புகம்பி வேலிகள் அமைத்தல் மற்றும் குழந்தைகள் விளையாட ஏதுவாக முகப்பு பகுதியில் டைல்ஸ் தளம் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.2.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
08	வார்டு எண்.59க்குட்பட்ட செங்குளம் காலனி மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டது.
09	வார்டு எண்.18க்குட்பட்ட மரு.மதுரம் நினைவு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு திடல் பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் படிக்கட்டுகள் கட்டும் பணி ஆகியவை ரூ.13.60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
10	வார்டு எண்.15க்குட்பட்ட சஞ்சீவி நகர் மெயின் ரோடு, கீழதேவதானம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.116, ரூ.22.10 இலட்சம் மதிப்பீட்டில் மறுகட்டமைப்பு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது.
11	வார்டு எண்.64க்குட்பட்ட கே.கே. நகர், மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் சமையலறையுடன் கூடிய இருப்பு அறை கட்டும் பணி ரூ.12.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
12	வார்டு எண்.19க்குட்பட்ட வெள்ளை வெற்றிலைக் காரத் தெரு, மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் அபிவிருத்திப் பணிகள் ரூ.5.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
13	வார்டு எண்.2க்குட்பட்ட மரு.இராஜன் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் மின் வசதிகள் ஏற்படுத்துதல், பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
14	வார்டு எண். 17க்குட்பட்ட மேலரண் சாலை, மாநகராட்சி உருது தொடக்க பள்ளியில் ரூ.36.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.
15	வார்டு எண்.9க்குட்பட்ட பாண்டமங்கலம் வடக்கு, மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில், சுற்றுச்சுவர் கட்டுதல், தலைமை ஆசிரியர் அறை கட்டுதல், பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் ஆகியவை ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
16	வார்டு எண்.50க்குட்பட்ட செங்குளம் காலனி மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டது.
17	வார்டு எண்.37க்குட்பட்ட காமராஜர் நகர், அப்துல்லா தெரு மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு ரூ.87.50 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது.

18	வார்டு எண்.59க்குட்பட்ட மன்னார்புரம் செங்குளம் காலனியில் செயல்பட்டு வரும் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியின் மைதானத்தில் சரளை மண் நிரப்பும் பணி ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
19	வார்டு எண்.30க்குட்பட்ட வரகனேரி முஸ்லிம் தெருவில் செயல்பட்டு வரும் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மராமத்து (ம) பராமரிப்பு பணிகள் ரூ.3.10 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
20	வார்டு எண்.18க்குட்பட்ட கீழரண் சாலையில் செயல்பட்டு வரும் மரு.மதுரம் நினைவு மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் மராமத்து (ம) பராமரிப்பு பணிகள் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
21.	வார்டு எண்.31க்குட்பட்ட ஒருக்கட்டான் மலை ரோட்டில் செயல்பட்டு வரும் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியின் கழிப்பிடத்தில் மராமத்து (ம) பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல், தண்ணீர் வசதி மற்றும் மின்வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ.5.15 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
22.	வார்டு எண்.62க்குட்பட்ட துளசிங்க நகரில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் ரூ.15.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது.
23.	வார்டு எண்.31க்குட்பட்ட பெரியார் நகர் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.422 & 423 கட்டிடங்களில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
24.	வார்டு எண்.28க்குட்பட்ட குத்பிசா நகர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.322,323& 324 கட்டிடங்கள் மறுகட்டமைப்பு செய்யும் பணி ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது.
	மொத்தம் ரூ.455.15 இலட்சம்

பள்ளி மேம்பாட்டு நிதி

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள், ந.க.எண்.6003/23/S S 2 , நாள்.25.10.2023 மற்றும் ந.க.எண்.25741/23/S S 2 , நாள்.26.10.2023ல் பள்ளி மேம்பாட்டு நிதி 2023-24ன் கீழ், 30 பணிகளை ரூ.8.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

வ. எண்	பணிகளின் விபரம்	மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)
1	வார்டு எண்.35க்குட்பட்ட தெற்கு உக்கடை மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு தெற்கு பகுதி – A ல் நான்கு வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணி.	70.00
2	வார்டு எண்.35க்குட்பட்ட தெற்கு உக்கடை மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு கிழக்கு பகுதி – B ல் நான்கு வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணி.	70.00
3	வார்டு எண்.35க்குட்பட்ட தெற்கு உக்கடை மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு வடக்கு பகுதி – C ல் நான்கு வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணி.	70.00
4	வார்டு எண்.56க்குட்பட்ட கருமண்டபம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் நான்கு வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணி.	70.00

5	வார்டு எண்.56க்குட்பட்ட சின்னகொத்தமங்கலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் நான்கு வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணி.	70.00
6	வார்டு எண்.17க்குட்பட்ட வேதாத்திரி நகரில் மாநகராட்சி உருது தொடக்கப் பள்ளிக்கு நான்கு வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணி.	70.00
7	வார்டு எண்.18க்குட்பட்ட கீழரண்சாலை, மதுரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் கூடுதலாக 2 வகுப்பறைகள் கட்டும் பணி.	33.00
8	வார்டு எண்.58க்குட்பட்ட எடமலைப்பட்டிபுதூர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கூடுதலாக 2 வகுப்பறைகள் கட்டும் பணி.	33.00
9	வார்டு எண்.3க்குட்பட்ட தேவி மாநகராட்சி நடுநிலைப் பள்ளியின் முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி.	40.00
10	வார்டு எண்.27க்குட்பட்ட மூலைக்கொல்லைத் தெரு மாநகராட்சி தொடக்கப் பள்ளியின் முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.	54.50
11	வார்டு எண்.27க்குட்பட்ட பென்சனர் தெரு மாநகராட்சி கோசா தொடக்கப் பள்ளியின் முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.	41.50
12	வார்டு எண்.42க்குட்பட்ட கீழகல்கண்டார்கோட்டை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் அறை மற்றும் இருப்பு அறையுடன் கூடிய சமையலறை கட்டும் பணி.	47.50
13	வார்டு எண்.9க்குட்பட்ட நாச்சியார் கோவில் தெரு மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் பள்ளியின் முன்புற வளாகத்தில் ஃபேவர் பிளாக் தளம் அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.	13.60
14	வார்டு எண்.9க்குட்பட்ட பாண்டமங்கலம் தெற்கு மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் சுற்றுச் சுவர் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பள்ளி வளாகத்தில் ஃபேவர் பிளாக் தளம் அமைத்தல், ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.	14.30
15	வார்டு எண்.35க்குட்பட்ட செந்தண்ணீர்புரம் மாநகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	11.90
16	வார்டு எண்.36க்குட்பட்ட ரயில் நகர் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	17.50

17	வார்டு எண்.38க்குட்பட்ட பாப்பாக்குறிச்சி மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	12.50
18	வார்டு எண்.40க்குட்பட்ட பகவதிபுரம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	11.90
19	வார்டு எண்.42க்குட்பட்ட மஞ்சத்திடல் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் சமையலறை கட்டுதல், கழிப்பறை மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பள்ளி வளாகத்தில் பேவர் பிளாக் பதித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.	19.50
20	வார்டு எண்.45க்குட்பட்ட மேலகல்கண்டார் கோட்டை பள்ளிவாசல் தெரு மாநகராட்சி பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	15.90
21	வார்டு எண்.59க்குட்பட்ட செங்குளம் காலனி நடுநிலைப் பள்ளியின் விளையாட்டு திடல் பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் குழந்தைகளுக்கான விழிப்புணர்வு ஓவியங்கள் வரையும் பணி.	13.30
22	வார்டு எண்.1க்குட்பட்ட அய்யனார் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் கழிப்பிடங்கள் கட்டும் பணி.	6.60
23	வார்டு எண்.1க்குட்பட்ட காஞ்சியம்மன் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	6.00
24	வார்டு எண்.5க்குட்பட்ட அய்யன்வெட்டி சாலை நேருஜி நினைவு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	7.15
25	வார்டு எண்.5க்குட்பட்ட அய்யன்வெட்டி சாலை நேருஜி பள்ளி வளாகத்தில் சமையலறை கட்டும் பணி.	6.10
26	வார்டு எண்.8க்குட்பட்ட அரவானூர் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	9.85
27	வார்டு எண்.11க்குட்பட்ட திருத்தாந்தோணி ரோடு சோழராஜபுரம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	9.10
28	வார்டு எண்.39க்குட்பட்ட எல்லக்குடி மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	8.60
29	வார்டு எண்.44க்குட்பட்ட தங்கேஸ்வரி நகர் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	8.70

30	வார்டு எண்.47க்குட்பட்ட சுப்ரமணியபுரம் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் செய்தல் மற்றும் புதை வடிகால் குழாய் பதித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.	7.60
	மொத்தம்	869.60

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள், ந.க.எண்.6003/23/SS2, நாள்.23.01.2024ல் பள்ளி மேம்பாட்டு நிதி 2023-24ன் (மூன்றாம் கட்டம்) கீழ், 7 பணிகளை ரூ.17.01 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

வ. எண்	பணிகளின் விபரம்	மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)
1	வார்டு எண்.59க்குட்பட்ட செங்குளம் காலனி மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் மின் வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.	8.50
2	வார்டு எண்.17க்குட்பட்ட ஜின்னா தெரு மாநகராட்சி உருது பள்ளிக்காக வேதாத்திரி நகரில் கட்டப்பட்டு வரும் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல், கழிப்பறை கட்டுதல், இருப்பறையுடன் கூடிய சமையலறை கட்டுதல், ஃபேவர் பிளாக் அமைத்தல் மற்றும் விளையாட்டு பகுதி அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.	52.50
3	வார்டு எண்.17க்குட்பட்ட தாராநல்லூர் அக்ரஹாரம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் செய்தல், இருப்பு அறை கட்டுதல் மற்றும் கூரை அமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்.	15.00
4	வார்டு எண்.18க்குட்பட்ட மதுரம் பள்ளியில் சுற்றுச்சுவரில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் இருப்பறையுடன் கூடிய சமையலறை கட்டும் பணி.	25.00
5	வார்டு எண்.20க்குட்பட்ட மணியக்காரத் தெரு மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	5.00
6	வார்டு எண்.52க்குட்பட்ட மேட்டுத் தெரு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.	59.50
7	வார்டு எண்.30க்குட்பட்ட மஜ்லிசுல் உலமா மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	5.00
	மொத்தம்	170.50

பொது சுகாதாரம்

➢ **டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்:**

டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகள் மற்றும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை பெற்று பிரசவிக்கும் தாய்மார்களுக்கு ரூ.18,000/. (ரூ.14,000/. வங்கி கணக்கில் ரொக்கமாகவும், ரூ.4,000/– மதிப்புள்ள தாய் சேய் நல பெட்டகமாகவும்) வழங்கப்பட்டு வருகிறது. மொத்தம் நடப்பாண்டில் 14831 கர்ப்பிணி பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

➢ **புற நோயாளிகள் சிகிச்சை:**

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் 18 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 2 மருந்தகங்களிலும் சுமார் 1031842 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது. மேலும், 3 சித்த மருந்தகங்கள் மூலம் சுமார் 45868 நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு சித்த மருந்துகள் வழங்கப்பட்டது.

வ.எண்	விவரம்	மருந்தகங்கள்/ மையங்களின் எண்ணிக்கை	சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை
1.	நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள்	18	1031842
2.	மருந்தகங்கள்	2	
3.	சித்த மருந்தகங்கள்	3	45868

உறையூர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், சமூக சுகாதார மையம் மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து இம்மருத்துவமனைக்கு தேவையான மருத்துவ சாதனங்கள் மற்றும் மருத்துவ தளவாட சாமான்கள் ரூ.24.75 இலட்சம் தொகையில் கொள்முதல் செய்யப்பட்டு இம்மருத்துவமனையில் நவீன மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது.

நோய் தடுப்பு நடவடிக்கைகள்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 65 வார்டுகளிலும் பொதுசுகாதார பணிகள் மற்றும் கிருமி நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு போன்ற கிருமி நாசினிகள் ரூ.44.67 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டது.

டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை:

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட 65 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. டெங்கு காய்ச்சல் குறித்த துண்டு பிரசுரங்கள், அறிவிப்புகள் மற்றும் விளம்பர பதாகைகள் வாயிலாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இம்மாநகராட்சிக்குட்பட்ட வீடுகள் தோறும் கொசுப்புழு ஆதார நிலை ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள இம்மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவு அலுவலர்கள், மற்றும் அலுவலர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு, ஒரு வார்டு குழுவிற்கு 50 தற்காலிக தினக்கூலிப்

பணியாளர்கள் வீதம் ஐந்து வார்டு குழு அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 250 பணியாளர்கள் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு, டெங்கு கொசுப்புழு ஆதார நிலைகள் கண்டறிந்து அழிக்கப்பட்டது.

இம்மாநகராட்சியின் 65 வார்டுகளில் அனைத்து பகுதிகளிலும் டெங்கு நோய் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

டெங்குகொசு வளர்வதற்கு ஏதுவாக உள்ள ஆதாரங்களை கண்டறியும் இடங்களில் சம்பந்தப்பட்ட நபர்களிடமிருந்து அபராதக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து நடவடிக்கைகளால் டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ABC/ARV பணிகள் :

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 65 வார்டுகளில் தெருநாய்களின் பெருக்கெடுத்த எண்ணிக்கையால் பொதுமக்கள் அதிக அளவில் பாதிப்பு அடைந்ததை தொடர்ந்து, இப்பணியின் அவசர அவசியம் கருதி நடப்பு நிதி ஆண்டில் இம்மாநகராட்சியின் நான்கு ABC/ARV மையங்களில் 9559 தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து, ரேபீஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இப்பணிக்காக இதுவரை ரூ. 135.00 இலட்சம் தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால், இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருநாய்களின் எண்ணிக்கை பெருகுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை தூய்மை பணிகள்:

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள 2,47,538 வீடுகள் மற்றும் 26000 வணிக நிறுவனங்களின் திடக்கழிவுகளை சேகரித்து நிர்ணயிக்கப்படும் இடத்தில் சேர்க்கும் பணிகள் வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1279.44 கி.மீ சாலைகள் மற்றும் 134 கி.மீ தெருக்களிலுள்ள சாலைகளில் துப்புரவு பணிகள் மற்றும் கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் பணிகள், தற்போது பணியில் உள்ள 1018 நிரந்தர தூய்மை பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள MCC மையங்களில் மக்கும் குப்பைகளை உரமாக்கும் பணிகளை மேற்கொள்ளவும், RRC மையங்கள், BIO GAS PLANT மையங்கள், OCC மையங்கள், பேருந்து நிலையங்கள், பூங்காக்கள் ஆகிய இடங்களில் பொது சுகாதார பணிகளை வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒவ்வொரு வார்டு குழுவிற்கும் 100 மனித ஆற்றல்கள் வீதம் இம்மாநகரட்சியின் ஐந்து வார்டுகுழு அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் 500 மனித ஆற்றல்களை கொண்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தூய்மை கணக்கெடுப்பு (ஸ்வச் சர்வேக்ஷன்) 2023 தரவரிசையில் தமிழகத்தில் முதலிடம்

மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, ஒரு லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள 29 நகரங்களில் தேசிய அளவிலான தூய்மை கணக்கெடுப்பு (ஸ்வச் சர்வேக்ஷன்) 2023ன்படி தமிழகத்தின் தூய்மையான நகரமாக திருச்சிராப்பள்ளி மாநகரம் முதல் இடத்தை பிடித்துள்ளது. அதே பிரிவில் தேசிய அளவில் திருச்சிராப்பள்ளி மாநகரம் 112வது இடத்தைப் பிடித்துள்ளது.

புதுதில்லியில் 11.01.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழகத்தின் தூய்மை நகரத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி முதலிடம் பெற்றதற்கான தூய்மை நகரத்திற்கான சான்றிதழ் மற்றும் விருதை மாண்புமிகு மேயர் அவர்கள், மாநகராட்சி ஆணையர் மற்றும் மாநகர் நல அலுவலர் ஆகியோர் பெற்றனர்.

திருச்சிராப்பள்ளி மாநகரத்தின் தூய்மை மற்றும் குடிமைச் சேவைகளை மேம்படுத்த இம்மாநகராட்சியில் கடந்த ஆண்டு மேற்கொண்ட பொது சுகாதார பணிகளின் அர்ப்பணிப்பு முயற்சிகளுக்கு இவ்விருது ஒரு சான்று.

2024-2025ம் ஆண்டில் இதரத் திட்டங்களின் (Other Schemes) கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் பற்றிய விவரம்

1. **பஞ்சப்பூரில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்திற்குள் குளிர் சாதன வசதிகளுடன் கூடிய பயணிகள் காத்திருக்கும் கூடம் கட்டும் பணி.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதில், ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தில் Air Conditioning அமைக்கும் பணியினை, இயக்குதல் மற்றும் பராமரித்தல் பற்றாக்குறை நிரப்பு நிதி 2023-24ன் கீழ் ரூ.16.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளதில், 23.02.2024ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று, பணிகள் மேற்கொள்ளப்படும்

2. **பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த சந்தை கட்டும் பணி**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த சந்தை அமைக்கும் பணியினை மேற்கொள்ள, விரிவான திட்ட அறிக்கை ரூ.161.70 கோடி மதிப்பீட்டில் தயார் செய்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி மற்றும் மான்யம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

3. **மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு கட்டிடம் கட்டும் பணி.**

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் 40888 சதுரடி பரப்பளவில், டாக்டர் கலைஞர் நூற்றாண்டு கட்டிடம் கட்டும் பணியினை மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.41.00 கோடி மதிப்பீட்டில் தயார் செய்து, நிர்வாக அனுமதி பெறுவதற்கு அரசின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி மற்றும் மான்யம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்

4. **மாநகராட்சி மைய அலுவலகத்திற்குள் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி.**

மாநகராட்சி மைய அலுவலக வளாகத்திற்குள் கூடுதல் அலுவலகக் கட்டிடம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.41.37 கோடி மதிப்பீட்டில் தயார் செய்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு, அரசின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி மற்றும் மான்யம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

5. <u>பஞ்சப்பூர் முதல் கோணக்கரை கரூர் புறவழிச்சாலை வரை கோரையாறு மற்றும் உய்யகொண்டான் ஆற்று கிழக்கு கரை பகுதியில் புறவழிச்சாலை மூன்று தொகுப்புகளாக அமைக்கும் பணி.</u>

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்டி கீழ்க்கண்ட பணிகளை அரசிடம் உரிய அனுமதி மற்றும் மான்யம் பெற்று மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தொகுப்பு–1ல் பஞ்சப்பூர் கோரையாறு மற்றும் உய்யகொண்டான் ஆறு கிழக்கு கரை பகுதியில் புறவழிச்சாலை மற்றும் கட்டமைப்பு பணிகளை (தொகுப்பு–1–பஞ்சப்பூர்) மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.85.50 கோடி மதிப்பீட்டில் தயார் செய்து அரசின் அனுமதி பெறுவதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு–2ல் உறையூர் உய்யகொண்டான் ஆறு கிழக்கு கரை பகுதியில் புறவழிச்சாலை மற்றும் கட்டமைப்பு பணிகளை (தொகுப்பு–2–உறையூர்) மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.83.00 கோடி மதிப்பீட்டில் தயார் செய்து அரசின் அனுமதி பெறுவதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு–3ல் கருமண்டபம் கோரையாறு மற்றும் உய்யகொண்டான் ஆறு கிழக்கு கரை பகுதியில் புறவழிச்சாலை மற்றும் கட்டமைப்பு பணிகளை (தொகுப்பு–3–கருமண்டபம்) மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ.182.00 கோடி மதிப்பீட்டில் தயார் செய்து அரசின் அனுமதி பெறுவதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

<u>6. புத்தூர் ஈ.வெ.ரா சாலை பகுதியில் ஐந்தாவது மண்டல அலுவலகம் கட்டும் பணி</u>

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண்.27க்குட்பட்ட புத்தூர் சாலையில் ஏற்கனவே உள்ள வார்டு குழு அலுவலகக் கட்டிடம் போதுமானதாக இல்லை. எனவே, பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்றவாறு, உள்ளாட்சி அமைப்புகளின் சேவைகளை செவ்வனே வழங்கிட புதிதாக, போதுமான இட வசதியுடன் நவீன அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.14.10 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசிடம், நிர்வாக அனுமதி மற்றும் மான்யம் பெறுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. உரிய அனுமதிப் பெற்று பிறகு பணிகள் மேற்கொள்ளப்படும்.

<u>7. கொட்டப்பட்டு குளம் மேம்படுத்தும் பணி.</u>

வார்டுக் குழு அலுவலகம் எண்.4, வார்டு எண்.61க்குட்பட்ட கொட்டப்பட்டு குளம் நீர் நிலை கரைப்பகுதியில் நடைபாதை, உணவகம், Selfie Point, Chainlink fencing, உயர் மின் கோபுர விளக்கு மற்றும் கழிவறை வசதிகளுடன் கூடிய பொழுதுபோக்கு தளமாக மேம்படுத்தும் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.9.90 கோடிக்கு மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து தரக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி மற்றும் மான்யம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

8. <u>உறையூர் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே, லிங்கம் நகர் அருகில், குழுமணி ரோடு முதல் தியாகராஜ நகர் வரை RCC பாலம் கட்டும் பணி.</u>

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண் 8க்குட்பட்ட உறையூர் குழுமணி ரோடு பகுதியில் குடமுருட்டி ஆற்றுபாலத்தின் அருகில் உள்ள சாலை குறுகலாக இருப்பதாலும்,

உறையூர் மீன் சந்தைக்கு வரும் கனரக வாகனங்களினாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதனை தவிர்க்கவும், இவ்விடமானது, மாநகராட்சியின் முக்கிய பகுதியாகவும் போக்குவரத்து மற்றும் பொதுமக்களின் நலன் கருதி அனைத்து மக்களும் கடந்து செல்லும் பகுதியாக உள்ளதால், இவ்விடத்தில் குழுமணி ரோடு முதல் தியாகராஜ நகர் வரை RCC பாலம் கட்டும் பணியினை மேற்கொள்ள ரூ.2.52 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு, நிர்வாக அனுமதி மற்றும் மான்யம் பெறுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. உரிய அனுமதிப் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்

9. வாமடம் பகுதியில் சமுதாயக்கூடம் கட்டும் பணி.

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண் 22க்குட்பட்ட வாமடம் பகுதியில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஏழை எளிய மக்கள் வாழ்ந்து வருவதால். அம்மக்கள் தங்களுடைய வீட்டு விசேஷங்களை கொண்டாடும் பொருட்டு, அப்பகுதியில் சமுதாய கூடம் கட்டுவதற்கு ரூ.1.73 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு, நிர்வாக அனுமதி மற்றும் மான்யம் பெறுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. உரிய அனுமதிப் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

10. உழவர் சந்தை எதிரே Food Street அமைப்பு ஏற்படுத்தும் பணி

வார்டு குழு அலுவலகம் எண்.5, வார்டு எண் 28க்குட்பட்ட சிவப்பிரகாசம் சாலையில், உழவர் சந்தை எதிரில் உள்ள காலியிடத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் Food street எனும் அமைப்பினை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு அனைத்து வகையான உணவுகளும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையிலும், மேலும் சாலையோர உணவு கடை வியாபாரிகளுக்கென ஒரு வியாபார ஸ்தலமாகவும் மாநகராட்சி சாலையில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையிலும் பெருநகரங்களில் உள்ளவாறு Food Street அமைக்கும் பணியினை மேற்கொள்ள ரூ.2.25 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு, நிர்வாக அனுமதி மற்றும் மான்யம் பெறுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. உரிய அனுமதிப் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

11. அண்ணா விளையாட்டு அரங்கத்தைச் சுற்றி வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல்

மூலதன மான்ய நிதி 2023-24ன் கீழ், வார்டு குழு அலுவலகம் எண்.2, வார்டு எண்.47க்குட்பட்ட அண்ணா விளையாட்டு அரங்கத்தினை சுற்றியுள்ள பகுதியில் நடைபயிற்சி மேற்கொள்ளும் தளம், மின்விளக்குகள் அமைத்தல், உடற்பயிற்சி மையம், மரத்திலான இருக்கைகள், பசுமை அமைப்புகள், செயற்கை நீருற்று மற்றும் இதர வளர்ச்சிப்பணிகளை ரூ.7.52 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் தற்பொழுது துவங்கி, நடைபெற்று வருகிறது.

12. SBM 2.0 திட்டப் பணிகள்

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி திருச்சி மாநகராட்சியில் தினசரி சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை முறையாக கையாண்டு மறு பயன்பாடு செய்யும் வகையில் SBM 2.0 திட்டத்தின் கீழ் ரூ.35.00 கோடி மதிப்பீட்டில் நாள் ஒன்றிற்கு சுமார் 100.00 மெட்ரிக் டன் கையாளும் திறன் கொண்ட பயோ-எரிவாயு உற்பத்தி நிலையம் (BIO CNG BOTTLING PLANT) அமைத்திட, விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு, முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP –REQUEST FOR PROPOSAL) கோரப்படும் நிலையில் உள்ளது.

திருச்சி மாநகராட்சியில் தினசரி சேகரிக்கப்படும் மக்காத குப்பைகளை முறையாக கையாண்டு அப்புறப்படுத்திட SBM 2.0 திட்டத்தின் கீழ் ரூ.35.00 கோடி மதிப்பீட்டில் நாள் ஒன்றிற்கு சுமார் 200.00 மெட்ரிக் டன் கையாளும் திறன் கொண்ட பொருள் மீட்பு வசதி மையம் (MRF –MATERIAL RECOVERY FACILITY CENTRE) அமைத்திட விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு, முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP –REQUEST FOR PROPOSAL) கோரப்படும் நிலையில் உள்ளது.

13. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்

கம்பரசம்பேட்டையில் உள்ள தலைமை நீரேற்று நிலைய பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணியினை மேற்கொள்ள ரூ.7.50 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யயப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

14. புதிதாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டுதல்

இம்மாநகராட்சி பகுதிவாழ் பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்குவதற்கு, புதிதாக கீழ்க்கண்ட பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

வ. எண்.	பணிகளின் விபரம்	மதிப்பீடு (ரூ. கோடியில்)
1.	வார்டு எண்.35க்குட்பட்ட செந்தண்ணீர்புரம் பகுதியில் புதிதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி	1.67
2.	வார்டு எண்.57க்குட்பட்ட ஸ்டேட் பாங்க் காலனி பகுதியில் புதிதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி	1.67
3.	வார்டு எண்.64க்குட்பட்ட பாரி நகர் பகுதியில் புதிதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி	1.67
4.	வார்டு எண்.65க்குட்பட்ட பசுமை நகர் பகுதியில் புதிதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி	1.67
5.	வார்டு எண்.30க்குட்பட்ட மதுரை ரோடு, லாரி ஷெட் பகுதியில் புதிதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி	3.35
6.	வார்டு எண்.32க்குட்பட்ட இருதயபுரம் பகுதியில் புதிதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி	3.35
7	வார்டு எண்.62க்குட்பட்ட பழனியப்பா நகர் பகுதியில் புதிதாக 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி	1.50

8	வார்டு எண்.46க்குட்பட்ட பொன்மலை அடிவாரம் பகுதியில் புதிதாக 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி	0.80
9	வார்டு எண்.58க்குட்பட்ட ராஜராஜ நகரில் புதிதாக 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி	1.00
10	வார்டு எண்.58க்குட்பட்ட கிராப்பட்டி பாரதி மின் நகரில் புதிதாக 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணி	1.00
	மொத்தம்	17.68

15. தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு நிதி TURIP-2024-25

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டதினால் சேதமடைந்த தார்ச்சாலைகளை, சீரமைக்க ரூ.33.73 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 23.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

16. நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் NSMT-2024-25

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டதினால் சேதமடைந்த சிமெண்ட் தளங்களை, சீரமைக்க ரூ.17.90 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 23.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

17. மாநில நிதிக்குழு மான்யம் (SFC–URDF)-2024-25

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மண்சாலைகளை, தார்ச்சாலைகளாக மாற்றுவதற்கு ரூ.23.67 கோடி மதிப்பீட்டிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 23.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

18.தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வாழ் பொதுமக்களின் சுகாதாரத்தினை பேணுவதற்காகவும், மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கும் இடவசதிக்கேற்ப அனைத்து கோட்டப்பகுதிகளிலும், புதிதாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் கட்டும் பணி தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் மான்யம் பெற்று மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

19.தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2024–2025

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், மருத்துவமனைகள் போன்ற மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் ஸ்மார்ட் கழிப்பறைகள் கட்டுவதற்கு இத்திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

20. பதினைந்தாவது நிதிக்குழு பரிந்துரை நிதி (காற்றின் தரம் மேம்படுத்துதல்) 2024–2025 –15th CFC

இத்திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதிக்குள் காற்றின் தரம் மேம்படுத்துதல் பணிகளை மேற்கொள்ள 2024 – 2025-ம் ஆண்டில் ரூ.11.00 கோடி மத்திய அரசிடமிருந்து நிதி பெறப்பட்டு, சாலை அகலம் முழுவதும் தார் தளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

21. பதினைந்தாவது நிதிக்குழு பரிந்துரை நிதி (திடக்கழிவு மேலாண்மை) 2024–2025 –15th CFC

இத்திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் உரக்கிடங்கில் உயிரி அகழ்வு (Bio–Mining) முறையில் ஏற்கனவே உள்ள பழைய குப்பைகள் சுமார் 6 லட்சம் டன் நீக்கம் செய்யும் பணிகள் சுமார் ரூ.25.00 கோடி மதிப்பீட்டிற்குள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

22. மூலதன மான்ய நிதி 2024–2025

இத்திட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் வார்டு எண். 5 8 க்குட்பட்ட கிராப்பட்டி முஸ்லீம் தெரு பகுதியிலும், வார்டு எண்.38க்குட்பட்ட அரியமங்கலம் பகுதியிலும் எரிவாயு சுடுகாடு மையம் அமைக்கும் பணிகள் தலா ரூ.2.50 கோடி வீதம், மொத்தம் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

23.விடுபட்ட இடங்களில் புதை வடிகால் வசதிகள் ஏற்படுத்தும் பணிகள்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அம்ரூத் திட்டத்தின் கீழ் புதைவடிகால் வசதிகள் அமைக்கும் பணிகள் 4 கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டங்களில் உட்படுத்தப்படாத பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டு, அனைத்து விடுபட்ட பகுதிகளுக்கும் 5ம் கட்டம் வழியாக புதைவடிகால் வசதிகள் வழங்கும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

24. உய்யக்கொண்டான் வாய்க்காலில் குறுக்குப் பாலங்கள் கட்டும் பணி

உய்யக் கொண்டான் வாய்க்காலில் ராஜா காலனி அருகிலும், துரைசாமிபுரம் பகுதியிலும் மற்றும் ஜல்லிக்கட்டு சாலைப் பகுதியிலும் குறுக்குப்பாலங்கள் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அரசிடம் உரிய அனுமதி மற்றும் மான்யம் பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

25.காந்தி சந்தை மற்றும் வாழைக்காய் சந்தை மேம்பாட்டுப் பணிகள்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், பஞ்சப்பூர் பகுதியில் ஒருங்கிணைந்த சந்தை அமைக்கப்பட்ட பிறகு, காந்தி சந்தையில் புதிதாக அரசு அலுவலகங்களுடன் கூடிய சில்லறை வியாபாரிகளுக்கான வணிக வளாகம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அரசு மான்யம் பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும் மற்றும் காந்தி சந்தை அருகிலுள்ள வாழைக்காய் சந்தையில் புதிதாக வணிக வளாகம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, அரசு மான்யம் பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

2024-2025 ஆம் ஆண்டில் மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள்

பொதுநிதி

1. சாலைகள்

மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள சாலைகளில் சுமார் 83.00.கி.மீ. நீளத்திற்கு, மண்சாலைகளை படிப்படியாக தார்சாலைகளாகவும், சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவும், பேவர் ப்ளாக்குகள் பொருத்தப்பட்ட சாலைகளாகவும் மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சாலைப்பணிகளை ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. மழைநீர் வடிகால் அமைத்தல்

மாநகராட்சியின் 65 வார்டுகளிலும், சுமார் 52.00 கி.மீ நீளத்திற்கு புதிதாக மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் கட்டுதல் போன்ற பணிகளை ரூ.32.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3. மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள கிராமப்புற உள்ளாட்சி அமைப்பு பகுதிகளுக்கு குடிநீர் வசதிகள் வழங்கும் பணிகள்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தற்பொழுது அனைத்து பொதுமக்களுக்கும் 135 MLD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்படவுள்ள கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வாழும் மக்களுக்கு, மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி இதே அளவு குடிநீர் வழங்குவதற்கு, கொள்ளிடம் ஆற்றுப் படுகையில், பஞ்சக்கரை பகுதியில் புதிதாக ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, குடிநீர் பெறுவதற்கு, அடிப்படை உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

4. மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள கிராமப்புற உள்ளாட்சி அமைப்பு பகுதிகளுக்கு புதைவடிகால் வசதிகள் வழங்கும் பணிகள்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தற்பொழுது அம்ரூத் புதை வடிகால் வழங்கும் திட்டம் பகுதி II, பகுதி III கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், புதிதாக இணைக்கப்படவுள்ள கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வாழும் பொதுமக்களுக்கு, மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி புதைவடிகால் வசதிகள் வழங்கும்

பணிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படும்.

5. **உய்யக்கொண்டான் வாய்க்காலில் கழிவு நீர் கலப்பதை தடுக்கும் பணிகள்.**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் உய்யக் கொண்டான் வாய்க்காலில் 32 இடங்களில் கழிவு நீர் கலப்பது கண்டறியப்பட்டு, அவைகளை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது அம்ரூத் புதை வடிகால் வழங்கும் திட்டம் பகுதி II, பகுதி III–ன் கீழ் புதைவடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பகுதி IV–ன் கீழ் புதைவடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பணிகள் அனைத்தும் முடிவுறும் சமயம், உய்யக்கொண்டான் வாய்க்காலில் கழிவு நீர் கலப்பது தடைபடும். அவ்வாறு தடைபடாத இடங்களில் சிறிய அளவிலான கழிவு நீர் சுத்திகரிப்பு மையங்கள் ஏற்படுத்தி, அப்பகுதிகளில் சேகரமாகும் கழிவு நீரை தடுத்து, புதைவடிகால் குழாய்களுக்கு செல்லும் வகையில், மாற்றியமைத்து, உய்யக்கொண்டான் வாய்க்காலை தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

6. **ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் கட்டும் பணிகள்**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் சுமார் 330 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் உள்ளன. அவைகளில் நடப்பாண்டில் சுமார் 38 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களில் மராமத்துப் பணிகளும், புதிதாக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்கள் கட்டும் பணிகள் ரூ.1.80 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2024–25ம் ஆண்டில் கீழ்க்கண்ட பகுதிகளில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையங்களில் புதிய கட்டிடங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வ. எண்	பணிகளின் பெயர்	மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)
01	வார்டு எண்.61க்குட்பட்ட ஏர்போர்ட் பகுதியில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.33614130105க்கு புதிய கட்டிடம் கட்டும் பணி.	15.00
02	வார்டு எண்.46க்குட்பட்ட மலையடிவாரம் பகுதியில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.33614130109க்கு புதிய கட்டிடம் கட்டும் பணி.	20.00
03	வார்டு எண்.46க்குட்பட்ட மாரியம்மன் கோவில் பகுதியில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.33614130110க்கு புதிய கட்டிடம் கட்டும் பணி.	18.60
04	வார்டு எண்.65க்குட்பட்ட பட்டத்தம்மாள் தெருவில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.33614130114ல் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	9.50
05	வார்டு எண்.29க்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்கள்.33614130201 மற்றும் 33614130204 ஆகியவற்றிற்கு புதிய கட்டிடம் கட்டும் பணி.	55.10

06	வார்டு எண்.56க்குட்பட்ட பகுதியில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்கள்.33614130316 மற்றும் 33614130317 ஆகியவற்றில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	9.40
07	வார்டு எண்.11க்குட்பட்ட பெருமாள் கோவில் தெருவில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.33614130420க்கு புதிய கட்டிடம் கட்டும் பணி.	18.40
08	வார்டு எண்.13க்குட்பட்ட மலைக்கோட்டை பகுதியில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.33614130210க்கு புதிய கட்டிடம் கட்டும் பணி.	19.40
09	வார்டு எண்.7க்குட்பட்ட அம்மா மண்டபம் புதுத் தெருவில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.33614130101ல் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	8.00
10	வார்டு எண்.43க்குட்பட்ட காவேரி நகரில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய கட்டிடத்தில் மறுகட்டமைப்பு செய்யும் பணி.	16.95
11	வார்டு எண்.57க்குட்பட்ட எம்.ஜி.ஆர் நகரில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் எண்.33614040109ல் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	5.50
12	வார்டு எண்.54க்குட்பட்ட பெரியமிளகுபாறை பகுதியில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையத்தில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல்.	6.30

7. புதைவடிகால் அடைப்புகள் நீக்கம் செய்யும் பணிகள்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதைவடிகால் குழாய்களில் அடைப்புகள் ஏற்பட்டால், அதை உடனடியாக சரி செய்து அடைப்புகளை நீக்குவதற்கு ஏதுவாக, குறிப்பிட்ட இடங்களில் புதைவடிகால் ஆய்வு அமைப்புகள் (Inspection Chambers and Diaphragm) கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8. ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தும் பணி.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தற்பொழுது வீட்டு பயன்பாடில்லாத (Non Domestic) குடிநீர் இணைப்புகளில் சுமரர் 3000 மீட்டர்கள் பொருத்தப்பட்டு குடிநீர் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் உபயோக அளவிற்கு ஏற்றவாறு கட்டணம் வசூல் செய்வதற்கு ஏதுவாக, புதிதாக ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

9. குடிநீர் ஆதாரத்தினை மேம்படுத்தும் பணிகள்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தற்பொழுது 135 MLD அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அளவினை தங்கு தடையின்றி வழங்க, காவேரி ஆற்றில், புதிதாக 5 ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு, குடிநீர் ஆதாரம் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

10. <u>தெருவிளக்குகள் மேம்படுத்தும் பணிகள்</u>.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தற்பொழுது மாநில நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் மூலம் ரூ.13.97 கோடி மதிப்பீட்டில் சுமார் 6264 எண்ணிக்கைகள் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது தவிர, மாநகராட்சியில் தெருவிளக்குகள் இல்லாத பகுதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, அதனடிப்படையில் அனைத்து விடுபட்ட பகுதிகளிலும் தெருவிளக்குகள் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. <u>வருவாய் பெருக்கும் வழிகள்</u>.

மாநகராட்சிக்கு கிடைக்க வேண்டிய அனைத்து வருவாய்களையும் மற்றும் வரி வருவாய்களையும் விடுதலின்றி கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். சொத்துவரிக்கு உட்படாத சொத்துகளை ஆய்வு செய்வதற்கு நவீன தொழில் நுட்ப உதவியுடன் கண்டறிய ட்ரோன்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அனைத்து விடுபட்ட சொத்துக்களும், சொத்துவரிக்கு உட்படுத்தப்பட்டு, சொத்து வரி கேட்பு எழுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

